Registered as a News Paper in Sri Lanka

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஞு வைகாசி மீ 10 ஆம் உ | வியாழக்கிழமை | (24 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷவ்வா 28 | ஓசை 95

## வர்த்தகருக்கு ரூபா 2 கோடி அபராதம் பெரும் மோசடி அம்பலம்

(கொழும்பு)

அறுபத்தைந்து லட்சம் ரூபாய் பெறுமதியான கூரைக் காற்றாடிகளை பிரான்சிலிருந்து இறக்குமதி செய்த வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் அதன் பெறுமதியை இருபத்தைந்து லட்சம் ரூபாயாகக் குறைத்துக் காட்டி எடுத்துச் செல்ல முயன்றபோது காமினி ராஜபக்ஷ என்ற சுங்க அதிகாரியினால் தடுத்து விசாரணை செய்யப்பட்டார்.

விசாரணையில் உரிய பெறுமதியை விட மிகக் குறைந்த தொகையைச் செலுத்திப் பொருட்களைக் கொண்டு செல்ல எடுத்த முயற்சி நிருபிக்கப் பட்டதாம். இதனைத் தொடர்ந்து இருநூறு லட்சம் (இரண்டு கோடி) ரூபாய் அந்த வர்த்தகருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

சுங்கப் பகுதியில் சமீபகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பெரும் மோசடி இது வென்று கருதப்படுகிறது.

# புலிகளுக்குச் சதி தமிழ் நாட்டிலும்

## விஷமப் பிரசாரத்துக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழ்நாட்டில் திட்டமிட்ட விஷமப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாகவும், தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் புலிகள் இயக்கத்திற்கும் மத்தியில் முரண்பாட்டை ஏற்படுத்துவதே இப்பொய்ப் பிரசாரத்தின் நோக்கமென்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. ஹிந்து, டைம்ஸ் ஆப் இந்தியா போன்ற பிரபல இந்திய பத்திரிகைகள் திட்டமிட்டு புலிகள் இயக்கம்பற்றி செய்யப்படும் இந்த விஷமப் பிரசாரம் இந்திய பத்திரிகா தர்மத்தை கேலிக்கூத்தாக ஆக்கியிருப்பதாக புலிகள் இயக்க பிரமுகர் ஒருவர் குற்றம் சாட்டினார். இந்திய உளவு ஸ்தாபனமாகிய 'றோ' இந்த சதிவேலையின் பின்னணியில் இருப்பதாக இப்பிரமுகர் கூறினார்.

பாக்கு நீரிணைக் கடற்பிரதேசம் முழுவதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், தமிழ்நாட்டு மீனவர்கள் பெரிதும் இன்னலுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்றும், கள்ளக் கடத்தல் போதைவஸ்து கடத்தல் போன்றவற்றில் புலிப்படை வீரர்கள் ஈடுபடுகின்றனர் என்றும் இந்திய பத்திரிகைகள் புலிகள் பற்றி மிகவும் கீழ்த்தரமாக செய்திகளை பிரசுரிக்கின்றன. தமிழ் நாட்டில் புலிகள் பயிற்சித் தளங்கள் வைத்திருக்கிறார்கள் என்றும் சென்னையிலும் மற்றும் நகரங்களிலும் புலிகள் அட்டகாசம் செய்து வருவதாகவும் தமிழ் நாட்டுப் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைப் புலிகள் பயமுறுத்தி வைத்திருப்பதாகவும் இந்த செய்திகள் கூறுகின்றன, தமிழ் நாட்டில் புலிகள் இயக்கத்தின் ஆயுத சர்வாதிகாரம் தலையோங்கி வருவதாகவும் தமிழக முதல்வரின் ஆதரவு இருப்பதாலேயே புலிகளின் பயங்கரவாதம் பரவி வருவதாக 'டைம்ஸ்ஒப் இந்தியா' சமீபத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மதிய உணவுப் பணம் ரூபா 76,000 மோசடி

(கண்டி)

யட்டிநுவரக் கொத்தணிப் பாடசாலை ஒன்றுக்கு மதிய

கண்டியிலுள்ள கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சென்ற ஆண்டு செப்ரம்பர்,

## “றோ” பற்றி பிரதமருடன்

## சமூகக்கல்வி கைந்நூல் தமிழில்இல்லை

(யாழ்நகர்)

11ஆம் ஆண்டு வகுப்புக்களில் சமூகக் கல்விப் பாடம் கற்பிப்பதற்கான ஆசிரியர் கைந்நூல் இதுவரை தமிழ்மொழியில் வெளியிடப்படவில்லை.

14. 12. 88இல் சிங்கள மொழியில்அச்சிடப்பட்டு 1989-ல்பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளசமூகக்கல்வி ஆசிரியர் கைந்நூல்தனிச்சிங்கள மொழியில் மட்டுமே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் உத்தியோக மொழியாகவும், தேசிய மொழியாகவும் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தும் நடைமுறையில் புறக்கணிக்கப்படுவதாக ஆசிரியவட்டாரங்களில் பேசப்படுகின்றன.

(52)

## மாணவர் பற்றிய மதிப்பீடு

(யாழ்நகர்)

பாடசாலை மாணவர் தொகை பற்றிய மதிப்பீடு ஒன்றினை செய்வதற்காக மத்திய அரசின் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

1990ஆம் ஆண்டில் உள்ள மாணவர் தொகை, வகுப்பு, கற்கை மொழி, சமயம் சம்பந்தப்பட்ட விபரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு மத்திய அரசின் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் சகல கொத்தணி பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

[] பாராளுமன்றத்தில்


# புலிகளைப் பற்றி கூச்சல் குழப்பம்

## ரஞ்சன் பதிலளிக்க மறுப்பு

(கொழும்பு)

“புலிகள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கமாட்டேன்” என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்னா நேற்று பாராளுமன்றத்தில் கூறிவிட்டு வெளியே சென்றதும் சிறிது நேரம் பாராளுமன்றத்தில் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

பாராளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்புப் பிரேரணை மீது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி



எம். பி. சிறிபாலா டி சில்வா விடுதலைப்புலிகள் பற்றிப் பிரச்சினையொன்றைக் கிளப்பினார்.

உடனே பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன்விஜேரத்தினா எழுந்து புலிகள் பற்றிய கேள்விகளுக்குத் தாம் பதிலளிக்கப் போவதில்லை என்று கூறிவிட்டுச் சபையிலிருந்து வெளியேறிச் சென்றார்.

தாம் எழுப்பிய பிரச்சினைக்கு அமைச்சர் பதிலளிக்கத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்குரிய முக்கியத்துவம் குறையாது

-ஹமீத்

(யாழ்ப்பாணம்)

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினருடன் நடத்தும் பேச்சுவார்த்தையால் அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் எந்த வகையிலும் குறைந்து விடாது என நீதி அமைச்சர் ஏ. சி.எஸ். ஹமீத் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தார். ஈ. பி. ஆர். எல்.எவ் வுடன் இலங்கை

பின்னணியில் இருப்பதாக இப்பிரமுகர் கூறினார்.

பாக்கு நீரிணைக் கடற்பிர
தேசம் முழுவதும் விடுதலைப்
புலிகளின் கட்டுப்பாட்டில்
இருப்பதாகவும், தமிழ்நாட்டு
மீனவர்கள் பெரிதும் இன்ன
லுக்கு ஆளாக்கப்படுகின்றனர்
என்றும், கள்ளக் கடத்தல்
போதைவஸ்து கடத்தல்
போன்றவற்றில் புலிப்படை
வீரர்கள் ஈடுபடுகின்றனர்
என்றும் இந்திய பத்திரிகை
கள் புலிகள் பற்றி மிகவும்
கீழ்த்தரமாக செய்திகளை பிர
சுரிக்கின்றன. தமிழ் நாட்டில்
புலிகள் பயிற்சித் தளங்கள்
வைத்திருக்கிறார்கள் என்றும்
சென்னையிலும் மற்றும் நக
ரங்களிலும் புலிகள் அட்ட
காசம் செய்து வருவதாகவும்
தமிழ் நாட்டுப் பொலிஸார்
மீது துப்பாக்கிப் பிரயோகம்
செய்து அவர்களைப் புலிகள்
பயமுறுத்தி வைத்திருப்பதாக
வும் இந்த செய்திகள் கூறு
கின்றன, தமிழ் நாட்டில் புலி
கள் இயக்கத்தின் ஆயுத சர்
வாதிகாரம் தலையோங்கி
வருவதாகவும் தமிழக முதல்
வரின் ஆதரவு இருப்பதா
லேயே புலிகளின் பயங்கர
வாதம் பரவி வருவதாக
'டைம்ஸ்ஒப் இந்தியா' சமீபத்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஒன்றினை செய்வதற்காக
மத்திய அரசின் கல்வி வெளி
யீட்டுத் திணைக்களம் நட
வடிக்கை எடுத்துவருகின்றது.

1990ஆம் ஆண்டில் உள்ள
மாணவர் தொகை, வகுப்பு,
கற்கை மொழி, சமயம் சம்
பந்தப்பட்ட விபரங்களை
எதிர்வரும் 25ஆம் திகதிக்கு
முன்னதாக அனுப்பி வைக்கு
மாறு மத்திய அரசின் கல்வி
வெளியீட்டுத் திணைக்களம்
சகல கொத்தணி பாடசாலை
அதிபர்களையும் கேட்டுள்
ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)



உடனே பாதுகாப்பு ராஜா
ங்க அமைச்சரும், பெருந்தோ
ட்டத்துறை அமைச்சருமான
ரஞ்சன்விஜேரத்தினா எழுந்து
யேறிச் சென்றார்.

தாம் எழுப்பிய பிரச்சினை
க்கு அமைச்சர் பதிலளிக்கத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மதிய உணவுப் பணம் ரூபா 76,000 மோசடி

(கண்டி)

யட்டிநுவரக் கொத்தணிப்
பாடசாலை ஒன்றுக்கு மதிய
உணவுக்கென வழங்கப்பட்ட
பணம் ரூபா 76,000 உரிய
முறையில் பள்ளிக்கூடப் பிள்
ளைகளின் மதிய உணவுக்குப்
பயன்படுத்தப்படாமல் கை
யாடப்பட்டுள்ளதாம். இது
தொடர்பான விசாரணையை
கண்டியிலுள்ள கல்வித் திணை
க்களம் மேற்கொண்டுள்ளது.

சென்ற ஆண்டு செப்ரம்பர்,
ஒக்ரோபர், நவம்பர் மாத
ங்களுக்கு மதிய உணவு வழ
ங்குவதற்கென அதிபரின்
பெயரில் காசோலையாக
கொடுக்கப்பட்ட ரூபா 76,000
க்குத்தான் இந்தக் குழறுபடி
நடந்துள்ளது.

# இந்திய புலமைப் பரிசில்கள் இன விகிதாசார அடிப்படையில்

(கொழும்பு)

இந்தியா, இலங்கைக்கு வழ
ங்கியுள்ள 500 உயர் கல்விக்
கான புலமைப்பரிசில்கள் இன
விகிதாசார அடிப்படையில்
வழங்கப்படுமென்றும் அதற்
காக மாணவ, மாணவிகளை
தெரிவு செய்யும் நடவடிக்கை
கள் தற்போது எடுக்கப்பட்டு
வருவதாகவும் கல்வி இராஜா
ங்க அமைச்சர் திருமதி இரா.
புலேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை இந்தப் புல
மைப் பரிசில்கள் மலையக
மாணவர்களுக்கும் வழங்கப்
பட வேண்டுமென்று கிராமிய
தொழிற்துறை உல்லாசப் பய
ணத்துறை அமைச்சர் எஸ்.
தொண்டமான் கேட்டுக்
கொண்டுள்ளார்.

இது பற்றி இந்திய தூதரக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "றோ" பற்றி பிரதமருடன் விவாதிக்கவுள்ளேன் -கருணாநிதி

(சென்னை)

''மத்திய அரசின் உளவு
நிறுவனமான 'றோ' குறித்து
வெளிப்படையாக விவாதம்
எதுவும் வேண்டாம் என்று
பிரதமர் சொல்லியிருப்பதை
அடுத்து அவரிடம் இது
குறித்து தொடர்ந்து விவா
திக்க இருக்கிறேன்'' என்று
தமிழக முதல்வர் மு. கருணா
நிதி தலைமைச் செயலகத்
தில் நிருபர்களிடம் பேசுகை
யில் கூறினர்.

'றோ' உளவு நிறுவனம்
குறித்து முதல்வர் தெரிவித்த
கருத்துக்களுக்கு பிரதமர்
வி, பி. சிங் அளித்த பதிலை
சுட்டிக் காட்டி முதல்வரின்
கருத்தை நிருபர்கள் கேட்ட
னர்.

பிரதமரின் பேச்சை பத்தி
ரிகைகள் தத்தம் கோணத்
தில் வெளியிட்டுள்ளன. றோ
உளவு நிறுவனம் குறித்து
வெளிப்படையான விவாதம்
வேண்டாம் என்று பிரதமர்
சொல்லியிருப்பதன் காரண
மாக நான் அவரிடமே அது
குறித்து தொடர்ந்து விவா
திக்க இருக்கிறேன் என்று கரு
ணாநிதி கூறினார்.

ஆந்திர அரசு சில ஆண்டு
களுக்கு முன்பு மத்திய அர

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்குரிய முக்கியத்துவம் குறையாது

-ஹமீத்

(யாழ்ப்பாணம்)

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்
கத்தினருடன் நடத்தும் பேச்சு
வார்த்தையால் அரசிற்கும்
புலிகளுக்கும் இடையில் நடக்
கும் பேச்சுவார்த்தையின் முக்
கியத்துவம் எந்த வகையிலும்
குறைந்து விடாது என நீதி
அமைச்சர் ஏ. சி.எஸ். ஹமீத்
நேற்று முன்தினம் நடை
பெற்ற பேச்சுவார்த்தையின்
போது தெரிவித்தார். ஈ. பி.
ஆர். எல்.எவ் வுடன் இலங்கை
அரசு நடத்தும் பேச்சுவார்
த்தை பற்றி விடுதலைப் புலி
கள் எழுப்பிய ஆட்சேபனை
க்கே அமைச்சர் மேற்கண்ட
வாறு தெரிவித்தாக அறிய
வருகின்றது.

## கிணற்றில் இல: தமிழர் சடலம்

(திருச்சி)

திருச்சி விமான நிலையத்
திற்கு அண்மையில் உள்ள
கிணறொன்றில் இருந்து
இலங்கைத் தமிழரின் சடலம்
ஒன்று கண்டெடுக்கப்பட்டது.
இச் சடலம் ஈ.பி.ஆர்.எல்.
எப். இயக்கத்தைச் சேர்ந்த
சிவம் என்பவரது என அடை
யாளம் காட்டப்பட்டுள்ளது.
இறந்தவர் திருச்சியில் உள்ள
அகதி முகாமிலிருந்தவர் என்
றும், சம்பவ தினம் இரு நண்
பர்களுடன் குளிக்கச் சென்
றார் எனவும் செய்திகள்
தெரிவிக்கின்றன.

## இராணுவ முகாம் அகற்றப்பட்டது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரிலி
ருந்து பதினைந்து மைல்
தூரத்தில் பன்குளத்தில்
அமைந்திருந்த இராணுவ
முகாம் அங்கிருந்து அகற்றப்
பட்டுள்ளது. இது நிரந்தர
இராணுவ முகாம் என்பது
குறிப்பிடத்தக்கது. இதே
வேளை, பாலம்பட்டாசில்
இருந்த சோதனை முகாமும்
எடுக்கப்பட்டுள்ளது.

## புதிய இந்தியத் தூதர்

(சென்னை)

ரோமன் இந்தியத் தூதுவ
ராக இருந்த மீசார்அக்பர் கல்
கலிலீஇலங்கைக்கானஇந்தியக்
கைக்கமிஷனராக அடுத்துப்
பதவியேற்பார். தற்பொழுது
இலங்கையிலுள்ள இந்தியத்
தூதுவராகவுள்ள எல் எல்.
மல்கோத்திராஇந்திய வெளியு
றவு அமைச்சகத்தின் தெற்
காசிய விவகாரத்திற்கான
செயலாளராக இனிப் பதவி
யேற்பார்.

# வாகன வரி செலுத்துவோர் தொகை மிகக் குறைவு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன வரி
செலுத்துவோரின் தொகை
தற்போது வெகுவாகக்
குறைந்துள்ளது. ஒரு
நாளைக்கு யாழ் செயலக
மோட்டார் வரிக் கிளைக்கு
ஒன்று அல்லது இரண்டு
மோட்டார் வாகன உரிமை
யாளர்களே வரியை செலுத்
துகின்றனர்.

இதேவேளை இம் மாதம்
31ஆம் திகதியுடன் வாகனவரி
செலுத்தும் சலுகை நாட்
கள் முடிவடைகின்றது. அத்
திகதியுடன் வரி கட்டவேண்
டிய தொகையுடன் தண்டப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மாத முடிவிற்குள் பருப்பும் வெங்காயமும் வந்து சேரும்

(கொழும்பு)

இந்தமாத இறுதிக்குள்போ
தியளவு பெரியவெங்காயமும்,
பருப்பும் கூட்டுறவு மொத்த
விற்பனை நிலையத்திற்கு
வந்து சேரும் என எதிர்பார்
க்கப்படுகிறது.

பெரிய வெங்காயமும் பருப்
பும் வந்து சேர்ந்ததும் தற்
போது இவற்றுக்கு ஏற்பட்
டுள்ள தட்டுப்பாடு முற்றாக
நீங்கிவிடுமென்று கூட்டுறவு
மொத்த விற்பனை நிலையப்
பேச்சாளர் தெரிவித்தார்.

ஏற்கெனவே இறக்குமதி
செய்யப்பட்ட பெரிய வெங்
காயம் தற்பொழுது நாடு

(6ஆம்பக்கம் பார்க்க)

# வவுனியாவில் இருந்து சிங்களப்பொலிஸார் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா பொலிஸ்
நிலையத்தில் பணிபுரியும்
சிங்களப் பொலிஸார் பல
ருக்கு இடமாற்றத்திற்கான
கட்டளை வந்திருப்பதாக
அறியப்படுகிறது.

தமக்கு விருப்பமான இடங்
களுக்கு அவர்கள் செல்ல
அழைப்பு வந்திருப்பதாக
வும் அறியப்படுகிறது.

குழுக்குழுவாக பணி
புரிந்து வரும் 'பிளட்டூட்'
குரூப் முறையும் நிறுத்தப்
பட்டு, வவுனியா பொலி
ஸார் தனித் தனியாக
வேலை செய்யப் பணிக்கப்
பட்டிருப்பதாக நம்பத்
தகுந்த வட்டாரங்களிலிருந்து
தெரிய வருகிறது.

இதே சமயம் நகரசபைக்
கட்டடத்தில் தங்கியுள்ள
பொலிஸாரில் பலர்,
பழைய பொலிஸ் நிலையத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலக தூதுவர்கள் விடுதலைப்புலிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வார இறுதியில் கனடா,
அவுஸ்திரேலியா, பிரிட்டன்
நாடுகளைச் சேர்ந்த தூதுவர்
வர்கள் யாழ்ப்பாணம் வரவுள்
ளார்கள். இவர்கள் யாழ்ப்பா
ணத்தில் விடுதலைப்புலிகளின்
முக்கிய பிரமுகர்களைச் சந்
தித்து இன்றைய அரசியல்
நிலைபற்றி கலந்துரையாடு
வார்கள் எனவும் தெரியவரு
கின்றது.

அதேவேளை நேற்று
யாழ்ப்பாணத்தில் அமெரிக்
கத் தூதரக அரசியல் அதிகாரி
பால் மயற் விடுதலைப் புலிக
ளின் அரசியல் ஆலோசகர்
அன்ரன் பாலசிங்கத்துடன்
இன்றைய அரசியல் நிலை
பற்றிக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில்

(6ஆம் பக்கம் பார்க்))

# வடக்கு-கிழக்கு ஆரம்ப பாடசாலை ஆசிரியர் நியமனத்தில் மோசடி

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும்
ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்
நியமனத்தில் ஒழுங்கீனங்கள்
நடைபெற்றிருப்பதைக்கல்விச்
சேவை ஆணைக்குழு சமீபத்
தில் கண்டுபிடித்திருக்கிறது.
போதிய தகைமையிருந்தும்
ஆரம்பப்பாடசாலை ஆசிரி
யர் திட்டத்தின் கீழ் நியமனம்
பெறாதோர் செய்த முறைப்
பாடுகளை விசாரணை செய்த
பொழுது, நியமனம்
வழங்குவதில் முறைகேடுகள்
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

350க்கு மேற்பட்டவர்க
ளுக்கு நியமனம் வழங்குவ
தில் ஒழுங்கீனங்கள் நடந்திருப்
பது ஊர்ஜிதமாகி, அந் நிய
மனங்களை உடனடியாக
நிறுத்தி வைக்கும்படி கல்விச்
சேவை ஆணைக்குழு உத்
தரவு பிறப்பித்துள்ளது.

இந் நியமனங்கள் தொடர்
பாக புலன்விசாரணை நடத்து
மாறு இரகசியப் பொலிஸார்
முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் தொடர்
பான கோவைகளில் பல கல்
விச்சேவை ஆணைக்குழுவில்
இருந்து மாயமாய் மறைந்து
விட்டனவாம்.

# திறைசேரி நிதி வழங்காததால் ஓய்வூதியக் கொடுப்பனவில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

மதக் கொண்டாட்டங்கள்
காரணமாகவும், அரசியல்
நலன் கருதியும் ஏற்கனவே
திட்டமிட்டபடி வழங்கப்படும்
ஓய்வூதியக் கொடுப்பனவுக
ளில் மாற்றங்கள் கொண்டு
வரப்படும்போது எமக்கு ஓய்
வூதியக் கொடுப்பனவுகள்
வழங்குவதில் சிரமம் ஏற்
பட்டு வந்தது. அரசால் கொ
டுப்பனவில் செய்யப்படும்
மாற்றத்திற்கேற்ப திறைசேரி
யில் ஓய்வூதிய கொடுப்பனவு
நிதி ஒதுக்கப்படாததே இதற்
குக் காரணம் என யாழ்.செய
லக ஓய்வூதியக்கிளை கணக்
காளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இவ்விடயம்
பற்றி கூறுகையில் இலங்கை
யிலேயே இரண்டாவது பெரிய
அரசாங்க ஓய்வூதியம் பெறு
வோர் கொண்ட மாவட்டம்
யாழ் மாவட்டமாகும் இத
னால் யாழ் மாவட்டம் பற்றி
மேலிடம் அதிக கவனம் செலு
த்த வேண்டும் என கோரி
தாம் கொழும்பில் அதிகாரி
களுடன் பேச்சுகள் நடாத்தி
தற்போது இந்நிலை அரசின்
உத்தரவுகளுக்கேற்ப திறை
சேரியும் ஓய்வூதிய நிதியை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள், சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலையவீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம்.

(B/ 1002)

### காணவில்லை

இ.செல்வராணி என்பவரின் உணவு முத்திரையும் அதனுடன் கூடிய மூன்று உணவு முத்திரையும் 22.05 90.மாலை 5 மணிக்குப்பின் ராசாவின் தோட்டத்திற்கும் ஸ்ரான்லி வீதி வழியாக பஸ் நிலையத்திற்கும் கஸ்தூரியார் றோட் வழியாக இந்துக் கல்லூரிக்கும் இடையில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் ராசாவின் தோட்டத்திலுள்ள K.செல்வரெத்தினம் A.D எனும் முகவரிடம் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(B-1007)


## ஆபத்தான நிலையில் தரிப்பு நிலையம்

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் கல்லடியில் அமைந்துள்ள இந்த பஸ்தரிப்பு நிலையம் மிகநீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் யார்தலையில் விழுமோ என்ற அபாய நிலையில் காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கமே இத்தரிப்பு நிலையத்தை நிறுவியது.

தற்போது ஆபத்தான நிலையில் காணப்படும் இந்த தரிப்பு நிலையத்தை மறுசீரமைப்பது யார் என பிரயாணிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

(55)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப்போட்டி யாழ். மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டார்.

திருமதி தேவராணி சுந்தர...

# புனரமைப்புக் கடன் பெற தேவையான தகைமைகள்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட உடைமைகளைப் புனரமைப்பது சம்பந்தமாக இலங்கை வங்கியில் கடன் வசதி பெற்றுக் கொள்வதற்கு கடன் பெறுவோர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும் என யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதிக் கிளை பிரதம வங்கி முகாமையாளர் தெரிவிக்கிறார்.

கடன் வசதியை பெறுபவர் பாதிக்கப் பட்டவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் உத்தரவாதிகள், ஆயுட் காப்புறுதி போன்றவையும் ஆதனங்களின் உறுதிப்பத்திரங்களும் பிணைகளாக ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகும்.

அத்துடன் இக்கடன்வசதித் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சம் ரூபா தொகை வரைக்கும் எமது மக்களுக்கு கடன் வசதி செய்துதரத் தாம் தயாராராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(லோ)

## நலன்புரிச் சங்கம்

(வந்தாறுமூலை)

வாழைச்சேனை போக்குவரத்துச் சபை ஊழியர்களால் நலன்புரிச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வீதியில் விபத்தில் யாராவது ஒருவர் இறந்தால் அவருக்கு உதவி செய்யும் முகமாக இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

(29)

## விளையாட்டுப் போட்டி

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ். மாநகர சனசமுக நிலைய சமாசம் தனது அங்கத்துவ சனசமூக நிலையங்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த உள்ளது இதில் உதைப்பந்தாட்டம் (15 வயதுக்குக்கீழ்) கரப்பந்தாட்டம் (பெண்களுக்கானது) தாட்சிப்போட்டிகளும் மருதன் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் உட்பட மெய்வல்னலுர் போட்டிகளும் இடம் பெறும்

(42)

## 2கோடி20லட்.சோவியத் வீரர் 2வது உலகயுத்தத்தில் இறப்பு

இரண்டாவது உலகப்போரில் உயிர் துறந்த சோவியத் வீரர்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாகச் சரியாக மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. 1946 ஸ்ராலின் 70 லட்சம் வீரர்கள் மாண்டனர் என்று அறிவித்தார். ஆனால் குருஷ்சேவ் இந்த எண்ணிக்கை 2 கோடி என்று அறிவித்தார். ஆனால் இன்று பல துல்லியமான ஆய்வுகளுக்குப் பிறகு இந்த எண்ணிக்கை இரண்டு கோடி எழுபது அல்லது எண்பது லட்சம் இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

போர் நடவடிக்கைகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை (சண்டையில் கொல்லப்பட்டவர்கள், காயத்தால் மடிந்தவர்கள், திரும்பிவராதவர்கள்) 8,666,000 ஆகும். காயமடைந்தவர்கள், குண்டு காயம் பெற்றவர்கள், உடல் நலம் இழந்தவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை ஒரு கோடி 80 லட்சம் ஆகும்.

நாஜி ஜெர்மனியின் இழப்பு 55 லட்சமும், அதன் கூட்டாளிகளின் இழப்பு 12 லட்சமும் ஆகும். போரின் ஆரம்பகட்டத்தில் சோவியத் யூனியனின் இழப்பு அதிகமாக இருந்தது. ஆனால் பிறகு நாஜி ஜெர்மனியும் அதன் கூட்டாளிகளுமே அதிக நஷ்டத்துக்குள்ளாயின.

## யாழ். கல்லூரியின் கிளைக்கல்லூரி திறப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் கிளைக் கல்லூரி பரந்கனில் உள்ள குமரபுரத்தில் நேற்று புதன் கிழமை திறந்து வைக்கப்படும். இக்கிளைக்கல்லூரி இருபது இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

இக் கல்லூரியில் ஆரம்ப வகுப்பிலிருந்து மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். காலக்கிரமத்தில் தொழில் நுட்பக் கல்விக்கு இக்கல்லூரியில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். இப்பகுதி மாணவர்களுக்கும், அயற் பிரதேச மாணவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும்.

## மனையியற் பொருட்காட்சிகள் அறிவிற்கும், பொருளுக்கும் உதவும்

(சித்தங்கேணி)

மனையியற் பொருட்காட்சிகள் மூலம் மாணவிகள் அனுபவரீதியான செயல் முறை அறிவைப் பொற்றுக்கொள்ள முடியும். பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும் மாணவிகள் வீட்டில் தமது ஓய்வு நேரங்களில் பணம் சம்பாதிப்பதற்கும் இப் பொருட் காட்சிகள் உதவுகின்றன.

இவ்வாறு இளவாலை வர்த்தகக் கல்லூரியின் அனுசரணையுடன் மானிப்பாய் பிறைற்றன் கல்லூரி நடத்திய மனையியல் கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றிய மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர். திருமதி. ச. கல்யாணசுந்தரேசன் குறிப்பிட்டார்

பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு.எஸ்.பி. நடராசா தலைமையில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்ற. இவ் வைபவத்தில் திருமதி. ச. கல்யாணசுந்தரேசன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

எமது பிரதேச மாணவிகளின் கைவண்ணத்தில் உருவாகும் தரமான மனையியல் கைப்பணிப் பொருட்களுக்கு பொதுமக்கள் பூரண ஆதரவு வழங்க வேண்டும். அப்போது மாணவிகளும் உற்சாகமான முறையில் இப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுவர்.

சான்றிதழ் களையும் பரிசுப் பொருட்களையும் பிரதம விருந்தினர் திருமதி. சரோஜினி கல்யாணசுந்தரேசன் வழங்கினார்.

(23)

## விவசாய விற்பனை முகவர்

(கிளிநொச்சி)

விவசாயிகள், கமக்காரர்களின் நன்மை கருதி விவசாயத் திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்படும் விதைகளை விற்பனை செய்வதற்காக விற்பனை முகவர்களை பதிவு செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலேயே மேற்படி முகவர்களை பதிவு செய்வதற்கான வேலை நடைபெற்று வருகிறது.

(49)

## திறந்த பல்கலைக்கழக மாணவர் அவைத் தேர்தல்

(அராலி)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பம், இயற்கை விஞ்ஞானம், மானிடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய மூன்று பீடங்களுக்குமான மாணவர் அவைத் தேர்தல்கள் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை தினசரி முற்பகல் ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளன.

நாடு முழுவதிலுமுள்ள பதினாறு கற்கை நிலையங்களையும் சேர்ந்த மாணவர்கள் ...மான யாழ்ப்பாண மாணவர்கள், யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பர். கிழக்கிலுள்ள இரு நிலையங்களிற்கும் பொதுவாக அம்பாறையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

## அபிவிருத்தி வேலைகள்

(கோண்டாவில்)

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் அப்பகுதி சிறுவர்களின் கல்வியை அபிவிருத்தி அடைய செய்யும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு...

## உரும்பிராய் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

'பரா' வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்பட்ட ... மைதானத்தில் நடைபெற்றது.

35 கழகங்கள் பங்கு பற்றிய ...


**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
CLINT EASTWOOD IN
HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30,
6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி
B 878

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
Terence Hill Bud Spencer
I AM FOR THE
HIPPOPOTAMUS

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
UNMASKING
THE IDOL
(Color)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை
நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ்,
மனோரமா, ஜெய்சங்கர்,
வை.ஜி. மகேந்திரன்
நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
B/699


## வசந்தபுரம் மக்களுக்கு நீர், மின் வசதிகளில்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் கிராம மக்கள் குடிநீர், மலசல கூடம், மின்சார வசதிகளின்றிஅவதியுற்று வருகின்றனர்.

கொழும்புத்துறை துறைமுகத்துக்கு அப்பால் மின் கம்பங்களில் விளக்குகள் இல்லை. இதனால் இவ் வீதிகளில் இரவு வேளையில் பொதுமக்கள் நடமாடுவதற்கு அச்சமடைகின்றனர். கடற்கரை வீதி படுமோசமான நிலையில் ... னங்களும் பாதசாரிகளும் போக்குவரத்துச் செய்வதில் பெரிதும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

துறைமுகத்தில் இருந்து மணிப்புரி வரை வீதிகள் குண்டுங் குழியுமாக காட்சியளிக்கின்றன. வசந்தபுரம் கிராமத்தின் இவ் அவலநிலை எப்போது நீங்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா என்று வசந்தபுரம் கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

(24)

தரிப்பு நிலையத்தை மறுசீரமைப்பது யார் என பிரயாணிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

(55)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப்போட்டி யாழ். மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டார்.

திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். சகல போட்டிகளின் முடிவுகளின் அடிப்படையில் 244 புள்ளிகளைப் பெற்று யாழ். கோட்டம் முதலாவதாகவும் 173 புள்ளிகளைப் பெற்று பண்டத்தரிப்பு கோட்டம் இரண்டாவதாகவும், 108 புள்ளிகளைப் பெற்று மருதனாமடம் கோட்டம் மூன்றாவதாகவும் வந்தன.

நிகழ்ச்சிகளின் இறுதியில் உடற்கல்வி அலுவலர் திரு த. அருணகிரிராசா நன்றி தெரிவித்தார். (மு)

## கோழிக்குஞ்சு விநியோகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நல்லினக்கோழிக்குஞ்சுகள் பெற்றுக்கொள்வதற்கு பதிவு செய்தவர்களுக்கு இம் மாதம் 25 ஆம் திகதியும், அடுத்த மாதம் 2 ஆம், 9 ஆம் திகதிகளிலும் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும் என பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளது.

இங்கு சேவல்குஞ்சு, பேட்டுக்குஞ்சு, இறைச்சிக்கோழிக்குஞ்சுகள விநியோகிக்கப்படவுள்ளன.

இந்நல்லினக்கோழிக்குஞ்சுகள் குண்டசாலையிலிருந்து கொண்டு வரப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(25)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்த ஒவ்வொரு பிரிவிலும் இருந்து பயிலுனர் ஆசிரியர்களின் நான்கு பிரதிநிதிகள் எதிர்வரும் 27-05-1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் விசேட பொதுக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மாணவர் அவைத் தேர்தல்

(அராலி)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பம், இயற்கை விஞ்ஞானம், மானிடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய மூன்று பீடங்களுக்குமான மாணவர் அவைத் தேர்தல்கள் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை தினசரி முற்பகல் ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளன.

நாடு முழுவதிலுமுள்ள பதினாறு கற்கை நிலையங்களையும் சேர்ந்த மாணவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக கொழும்பு மாத்தறை, கண்டி, அனுராதபுரம், கேகாலை, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய ஏழு நிலையங்களிலும் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு கற்கை நிலையமான யாழ்ப்பாண மாணவர்கள், யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பர். கிழக்கிலுள்ள இரு நிலையங்களிற்கும் பொதுவாக அம்பாறையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

## அபிவிருத்தி வேலைகள்

(கோண்டாவில்)

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் அப்பகுதி சிறுவர்களின் கல்வியை அபிவிருத்தி அடையச் செய்யும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உயர் வகுப்பு மாணவர்களின் கல்வியையும் மேம்படுத்தும் வகையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (34)

பதிவு செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலேயே மேற்படி முகவர்களை பதிவு செய்வதற்கான வேலை நடைபெற்று வருகிறது. (49)

மாணவர்களும் உற்சாகமான முறையில் இப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுவர்.

சான்றிதழ் களையும் பரிசுப் பொருட்களையும் பிரதம விருந்தினர் திருமதி. சரோஜினி கல்யாணசுந்தரேசன் வழங்கினார். (23)

உரும்பிராய்

## விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

'பரா' வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்பட்ட 6 பேர் கொண்ட அணிகளுக்கான 6 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் உரும்பிராய் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது. நொதேர்ண் விளையாட்டுக் சழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இப்போட்டிகள் யாவும் செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

35 கழகங்கள் பங்கு பற்றிய இச்சுற்றுப் போட்டிகளின் இறுதிப்போட்டியில் உரும்பராய் விளையாட்டுக்கழக 'எ' அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக 'எ' அணி மோதியது. இப்போட்டியின் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட புவியியல் விரிவுரையாளர் திரு. ஆர். சிவச்சந்திரன் கலந்துகொண்டு இறுதிப் போட்டியில் மோதிய கழகங்களின் வீரர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார்.

(42)

## உணவு முத்திரை ரத்து

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ளவர்களுக்கான உணவு முத்திரைகள் இவ் வாரத்தில் வழங்கப்பட்டபோதும், மாநகர சபையில் வேலை செய்யும் தற்காலிக ஊழியர்கள், வெளிநாடு சென்றோர்களுக்கான முத்திரை விநியோகம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இருந்தும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இரத்து செய்யப்பட்டவர்களின் உணவு முத்திரைகளையும் வழங்க ஏற்பாடு செய்வதாக கிராமசேவகர் திரு. ப. சந்திரசேகரம் தெரிவித்தார். (34)

## கரடியனாறு பண்ணை புனரமைப்பு

கரடியனாறு விவசாய பண்ணையில் நிலை கொண்டு இருந்த இராணுவத்தினர் கடந்த மாதம் விலகிச் சென்றுள்ளதால் பண்ணை வேலைகள் புனருத்தாரணம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றினுள் விதை உற்பத்தி நிலையம், உள்ளகப் பயிற்சி நிலையம், பகுதி ஆராட்சி நிறுவனம், மாவட்ட பயிற்சி நிலையம் என்பனவும் இங்கு அடங்கும்.

இவற்றின் புனருத்தாரண வேலைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நடைபெறுகின்றன. (29)

## வசந்தபுரம் மக்களுக்கு நீர், மின் வசதிகளில்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் கிராம மக்கள் குடிநீர், மலசல கூடம், மின் சார வசதிகளின்றி அவதியுற்று வருகின்றனர்.

கொழும்புத்துறை துறைமுகத்துக்கு அப்பால் மின் கம்பங்களில் விளக்குகள் இல்லை. இதனால் இவ் வீதிகளில் இரவு வேளையில் பொதுமக்கள் நடமாடுவதற்கு அச்சமடைகின்றனர். கடற்கரை வீதி படுமோசமான நிலையில் இருப்பதால் வாகனங்களும் பாதசாரிகளும் போக்குவரத்துச் செய்வதில் பெரிதும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

துறைமுகத்தில் இருந்து மணிப்புரி வரை வீதிகள் குண்டுங் குழியுமாக காட்சியளிக்கின்றன. வசந்தபுரம் கிராமத்தின் இவ் அவலநிலை எப்போது நீங்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா என்று வசந்தபுரம் கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர். (24)

## நன்கொடையை உடன் வழங்குக - டிவகலாலா

(கொழும்புத்துறை)

உள்ளூராட்சித் திணைக்களத்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு வழக்கப்படும் வருடாந்த அரச நன்கொடைப் பணத்தை உடனுக்குடன் அச் சனசமூக நிலையங்களுக்குவழக்கப்பட வேண்டுமென்று யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம்டிவகலாலா யாழ். மாநகர ஆணையாளர் பிரதேசசபைகள், நகரசபைகளின் விசேட ஆணையாளர்களை சுற்று நிருபமூலம் கோரியுள்ளார்.

சனசமூக நிலையங்களுக்கு உள்ளூராட்சித் திணைக்களம் வழங்கி வரும் அரச நன்கொடைப் பணம் உள்ளூராட்சிமன்றங்களினால் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று அடிக்கடி அச்சனசமூக நிலையங்கள் முறையீடுகள் செய்து வருகின்றன என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சித்திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(24)


# சாரதிப் பயிற்சி

நாற்பது வருட சேவை தொடர்கிறது

அனுபவம்- ஆற்றல்- நிதானம்

✻ வெளிநாடு செல்வோர் தொழிலுடன் செல்லுங்கள்

சகல விதமான வாகன சாரதிப் பயிற்சிகளையும் நாம் நேரடியாக நிதானமாக பயிற்சி கொடுக்கிறோம்.

✻ பெண்களுக்கு சாரதிப்பயிற்சி விசேடமாக பயிற்றுகிறோம்

✻ எம்மிடம் பழகியவர்கள் விரும்பினால் கொழும்பில் சாரதி அனுமதிப்பத்திரம் எடுத்துக்கொடுக்கின்றோம்.

# பிள்ளையார் லேனர்ஸ்

கட்டப்பிராய்

(B/964)



# A. A. T. and I. A. B.

**Examination - Dec. 1990**

A. A. T. — PRELIM
A. A. T. — SRI LANKA
I. A. B. — STAGE I
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 26—5—1990

✻ C. I. M. A., Sri Lanka Chartered Accountant ஆக இலகு பயிற்சிநெறி

✻ G. C. E. (சாதாரண தரத்துடன்) அல்லது 2 வருட கணக்கியல் அனுபவத்துடன் பயில இயலும்.

C. I M. A. Stage I வகுப்புக்கள் 19-5-90 இல் ஆரம்பமாகியுள்ளன. Stage II and III 2. 6. 1990 முதல் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு

# NORTH CEYLON

**TECHNICAL INSTITUTE**

(Result Oriented Institute in North)

*14, ST. PETERS LANE*
*HOSPITAL ROAD,*
**JAFFNA**

(B.1012)

# காஷ்மீரில் இராணுவ துப்பாக்கிச் சூடு பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பம்

(டில்லி)

காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீ நகரில் திங்கட்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி இந்தியாவின் பாராளுமன்ற இரண்டு அவைகளிலும் பெரும் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

திங்கட்கிழமை காஷ்மீரில் முஸ்லிம் தலைவர் பௌலவி பாரூக் கொலையைத் தொடர்ந்து நடந்த ஆர்ப்பாட்ட பேரணியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 47 பேர் வரை கொல்லப்பட்ட சம்பவத்தையொட்டி இவ்வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

மேலவையின் தலைவரும் துணை அரசுச் செயலாளருமான எஸ். வி. சர்மா ஆசனத்தில் அமர முன்னரே எதிர்க்கட்சியான காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து நின்று அரசுக் கெதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கீழ் அவையில் அவைத்தலைவர் கேள்வி நேரத்தின் போது பேச முற்பட்ட வேளையில் எதிர்கட்சியினர் போட்ட கூச்சலில் அவர் குரலேஎடுபடாது போயிற்று.

இறுதியில் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் இத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விளக்கினார். இராணுவத்தினர்மீதுகாஷ்மீர் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னரே இராணுவத்தினர் தீவிரவாதிகளைச் சுட்டார்களே தவிர பொதுமக்களைச் சுடவில்லை என பதில் அளித்தார்.

பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கி மோதலில் உயிர்ச் சேதம்ஏற்படும் படியான ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது' என்று வி.பி.சிங் அவையில்கூறினார்.

ஆனால் காஷ்மீர் பாரளுமன்ற உறுப்பினர், பேரவையில் கலந்து கொண்ட இயக்கத்தார் அனைவரும் நிராயுதபாணிகள் என்றும் அவர்கள் ஆயுதம் வைத்திருக்காத பொது மக்கள் என்றும் கூறினார்.

ஊரடங்குச் சட்டத்தை மீறி நடந்த ஊர்வலம் என்பதற்காக இராணுவத்தினர் தான் முதலில்துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள் என்றும் கூறினார்.

இதேவேளை தேசிய மாநாட்டுச்சபை உறுப்பினர்கள் இராணுவம் தான் மௌலவி பாரூக்கை கொன்றது என குற்றம்சாட்டினார்.

இதனை பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் என்.கே. சத்வானி கடுமையாக மறுத்தார்.

## பலஸ்தீனர் கொலைக்கு ஜோர்டானில் ஆர்ப்பாட்டம்

(அமான்)

கடந்த ஞாயிற்றுக் கிழமை பலஸ்தீனியர்கள் ஏழு பேரை இஸ்ரேலியர் ஒருவர் சுட்டுக் கொன்ற சம்பவம் பற்றி கண்டன ஆர்ப்பாட்டங்கள் பல இடங்களில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

ஜோர்டானில் இரண்டாவது நாளாக பொதுமக்கள் ஆத்திரத்தோடு ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள்.

அகதிமுகமொன்றில் ஆயிரக் கணக்கான பலஸ்தீனர்கள் ஜோர்டானிய பொலிசாரோடு மோதினர்

மற்றொரு இடத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு சிறுவன் ஒருவன் பலியானார்.

இதற்கிடையே கிழக்கு ஜெருசலேமில் அமெரிக்கா தூதரகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தை கலைக்க இஸ்ரேலிய பொலிசார் கண்ணீர்க் குண்டுகளைப் பயன் படுத்தினார்.

## காபூல் விமானத்தளம் மீது கெரில்லாக்கள் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் முஜாசிதின் கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலினால்காபூல்விமான நிலையம் மூடப்பட்டது.

12 றொக்கற்றுகள் வீசப்பட்டதாக அரசாங்க அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதை விட அதிகமானறொக்கற்றுக்கள் வெடிக்கப்பட்டன என்று நேரில் கண்ட பொது மக்கள் கூறுகின்றனர்.

சேதம் பற்றி மேலதிக விபரங்கள் இன்னும் அறிவிக்கப் படவில்லை விமான நிலையத்தில் இருந்து வர்த்தக விமானங்கள் எதுவும் புறப் படவில்லை.

காபூலுக்கு செல்ல விருந்த பத்திரிகையாளர் பலர்திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

## சோவியத் யூதர்களால் மத்திய கிழக்கில் நெருக்கடி

(கெய்ரோ)

சோவியத் யூனியனில் இருந்து பெருந்திரளாக வெளியேறும் சோவியத் யூதமக்கள் இஸ்ரேலில் குடியேறுவது மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் புதிய குழப்பத்தை உருவாக்குவதாக எகிபதிய ஜனாதிபதி முபாரக் எச்சரித்திருக்கிறார்.

கெய்ரோவில் சோசலிச தேசிய மகாநாட்டை ஆரம்பித்து வைத்த முபாரக் பேசுகையில் இந்த சோவியத் யூனியனின்யூதர்களை ஜோர்டான் நதியின் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேல் குடியமார்த்தக் கூடும்.இதனால் சமாதான முயற்சிகள் முடியடிக்கப் படலாம் என்றுகூறினார்.

இந்தஅபாயத்தை சோசலிச தேசிய மாகநாட்டு இயக்கம் எதிர்கொண்டு அழிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## நற்சமூக நடுநிலைய சொற்பொழிவுத் தொடர்

(யாழ்ப்பாணம்)

நற்சமூக நடுநிலையம் நடாத்தும் சொற்பொழிவுத் தொடரில் ''படைப்பின் சீரிய நிலையும் சூழல் மாசடைதலும்''என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவுஎதிர்வரும் சனியன்று காலை 9 மணியளவில், 4ஆம் குறுக்குத் தெருவில் உள்ள நற்சமூக நடுநிலை மண்டபத்தில் நடைபெறும்.

கலாநிதி சி.யோ.இமானுவேல் தலைமை தாங்கும்இந் நிகழ்ச்சியில் பிரதம பேச்சாளர்களா கலாநிதி மார்க்சவரி முத்து,யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஜ.ஹென்றி விக்ரா ஆகியோர் கலந்து சொள்வார்கள்.

## புனரமைப்பு வேலைகள்

சௌக்கிய சேவை பகுதியால் ஏறாவூர், செங்கலடி போன்ற வைத்தியசாலைகள் புனரமைப்புசெய்யப்பட இருக்கின்றன சித்தாண்டியிலும், றூகத்திலும் கட்டப்பட்டு வரும் கிராமோதய சுகாதார நிலையங்கள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. (29)

## வட்டுக்கோட்டை ஆஸ்பத்திரி சிரமதானம் மூலம் செப்பனிடல்

(அராலி)

உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு வட்டுக் கோட்டை அரசினர் ஆஸ்பத்திரியில் செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களும் மற்றும் தொண்டர்களும் கடந்த வாரம் சிரமதானப் பணிகளை மேற்கொண்டார்கள்.

ஆஸ்பத்திரி தளபாடங்கள் மற்றும் சுவர்களுக்கு மை பூசும் பணிகளை அவர்கள் மேற்கொண்டனர். சுகாதாரத் திணைக்களம் மை வகைகளை வழங்கியிருந்தது. சிரமதானப் பணிகளுக்கான பிரதான ஏற்பாடுகளை இப்பகுதியைச் சேர்ந்த செஞ்லுவைச் சங்க முக்கியஸ்த்தர் திரு. நா. குசராசா செய்திருந்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சுமார் நாற்பதினாயிரம் மக்களுக்கான ஒரே பெரியாஸ்பத்திரி இதுவாகும்.

மட்டக்களப்பு மாவட்ட

## தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்

கடந்த 16.05.90 அன்று மட்டக்களப்பு மாவட்ட தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அமைப்பு அங்குரார்ப்பணக் கூட்டம் மட்டக்களப்பு தேசிய கூட்டுறவுச்சபை கேட்போர் கூடத்தில் பனை அபிவிருத்திச் சபையின் இணைப்பு உத்தியோகத்தர் திரு த.தயாபரன் தலைமையில் நடைபெற்றது. திரு. தயாபரன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில்,

இச் சமாச அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சீவல் தொழிலாளர் களின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்அமைப்பாகச் செயற்படுவதோடு இம் மக்களின் சமூக, பொருளாதார அரசியல் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய அமைப்பாகச் செயற் படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மற்றும் மட்டக்களப்பு தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளரும் உரையாற்றினார்.பின்னர் தலைவர்: ஆர். ரி: சற்குணம் செயலாளர்: க. சிவபாதம் முகாமையாளர்: சொலமன்ராஜ் உபதலைவர் யேசுநேசன் உப செயலாளர் தெய்வநாயகம், ஆகியோரும் இயக்குனர் சபை உறுப்பினர்களாக திரு லா. பிலிப்பையா, த. நடராசா, ந.அற்புதராசா நற்குணசிங்கம், எஸ்.மகேந்திரன் தெ. செல்வின்யூட், திரு. சின்னராசா, திரு. டானியல் ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழகம்

## விஞ்ஞான பீடத்திற்கு 2130 லட். செலவில்புதிய கட்டிடம்

கிழக்குபல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி 2130இலட்சம் செலவில் நிர்மாணிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் கே. சந்தானம் கூறினார்.

ஏற்கனவே 450 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருந்தது. தற்போது 2130 இலட்சம் என தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும்அவர் சொன்னார்.

கட்டிடத் தொகுதியின் வரைபடம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இவ்வருடம் ஐந்நூறு மாணவர்கள் அனுமதிக்கப்படலாமென எதிர்பார்க்கப் படுவதாகவும் வழமையான அனுமதி முந்நூறுபேர் என்றும் அவர் தெரிவித்தார். (37)

## சிற்றூரவையின் அமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் ''சிற்றூரவை''கள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

கிராம சேவை' அலுவலர் பிரிவுகள் ரீதியாகவே இச் சிற்றூரவைகள் அமைக்கப் பட்டு வருகின்றன. (25)

## மின்விசை ஊடாக மருந்து ஏற்றுதல்

மின்விசை ஊடாக நோயாளியின் உடலுக்குள் மருந்தைச் செலுத்தும் புதிய முறை ஒன்றை அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

நோயாளிக்கு செலுத்தவேண்டிய மருந்துப்பொருட்களைக் கொண்ட Patch மீது மிகவும் குறைந்தளவு

## தமிழைவிட ஆங்கிலத்தில் வேகமாக எழுத முடிவது ஏன்?

பொதுவாக எழுத்துக்கள் இடச்சுற்றாக அல்லது வலச் சுற்றாக அமையுமானால் ஒவ்வொரு எழுத்தையும் எழுதும் போது சிரமம் ஏற்படமாட் போது அந்த எழுத்தின் முடிபு வலப்புறமாக அமைவதாலும் அடுத்த எழுத்தின் ஆரம்பம் இடது ஓரத்தில் தொடங்குவதாலும் ஆங்கிலச் சொல்லை எளிதாகவும் விரைவாகவும் எழுத முடியும்.

தமிழில் ஒரு பக்கத்தை எழுதுவதற்கு 30 நிமிடங்கள் தேவைப்படின் அப்பக்கத்தை

## வாழ்நாளில் நீரின்றி வாழும் பிராணி

புவியில் வாழும் உயிரினங்கள் யாவற்றுக்கும் நீர் இன்றியமையாதது. ஆனால் அமெரிக்காவின் தென் மேற்குப் பாலைவனத்தில் வாழும் கங்காரு எலி என்ற பிராணி தன் வாழ்நாளில் ஒரு முறை கூட தண்ணீர் குடிப்பது கிடையாது.

டதாக அரசாங்க அதிகாரி கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதை விட அதிக மானறொக்கற்றுக்கள் வெடிக் கப்பட்டன என்று நேரில்

விமானங்கள் எதுவும் புறப் படவில்லை.

காபூலுக்கு செல்ல விருந்த பத்திரிகையாளர் பலர்திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

முயற்சிகள் முடியடிக்கப் பட லாம் என்றுகூறினார்.

இந்தஅபாயத்தை சோச லிச தேசிய மாகநாட்டு இயக்

மேற்கொண்டார்கள்.

ஆஸ்பத்திரி தளபாடங்கள் மற்றும் சுவர்களுக்கு மை பூசும் பணிகளை அவர்கள்

வட்டுக்கோட்டைத் தொகு தியிலுள்ள சுமார் நாற்பதி னாயிரம் மக்களுக்கான ஒரே பெரியாஸ்பத்திரி இதுவாகும்.

தெரிவிக்கையில், கிழக்குப் பல் கலைக் கழகத்தில் இவ்வருடம் ஐந்நூறு மாணவர்கள் அனும திக்கப்படலாமென எதிர்பார்

கிராம சேவை' அலுவலர் பிரிவுகள் ரீதியாகவே இச் சிற் றூரவைகள் அமைக்கப் பட்டு வருகின்றன. (25)

## மின்விசை ஊடாக மருந்து ஏற்றுதல்

மின்விசை ஊடாக நோயாளியின் உடலுக்குள் மருந்தைச் செலுத்தும் புதிய முறை ஒன்றை அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

நோயாளிக்கு செலுத்தவேண்டிய மருந்துப்பொருட் களைக் கொண்ட Patch மீது மிகவும் குறைந்தளவு அழுத்தம் உடைய மின்சாரத்தைப் பாய்ச்சும் போது அம் மருந்து நோயாளியின் உடலுக்குள் செலுத்தப் பட்டு விடுகின்றது.


ஊசி மூலம் மருந்தை உடலுக்குள் ஏற்றுவதில் உள்ள அசௌகரியங்கள்இதனால்தவிர்க்கப்படுகின்றது. வலி, வாதம், மயக்குதல் போன்றவற்றுக்கு மின்விசை மூலம் மருந்து உடலுக்குள் ஏற்றப்படுகின்றன.

Ionotophoresis எனப்படும் இந்தப் புதிய முறை அமெரிக்காவின்யூட்டா பல்கலைக்கழகஆராய்ச்சியாளர் களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இப் புதிய முறை மூலம் நீண்ட காலம் புற்று நோயினால் அவதிப்படும் நோயாளியின் வலியைக் குறைக்க முடி யுமா என ஆராய்ச்சி நடாத்தி வருகின்றார்கள்.

## மடக்க முயன்றவர் மடங்கினார்

ஒருமுறை ஒட்டக் கூத்தர், புலவர் புகழேந்தியை மட்டம் தட்ட விரும்பினார். எங்கள் நாட்டு சோழ மன்னர்கள் முதுகுக்கவசம் அணிவதில்லை உங்கள் நாட்டு பாண்டிய அர சர்களோ உறுதியான முதுகுக் கவசம் அணிகின்றார்கள். எங் கள் சோழ மன்னர்கள் யுத் தத்தின்போது புறமுதுகு காட்டி ஓடமாட்டார்கள். எனவேதான் எங்கள் சோழ மன்னர்கள் முதுகுக் கவசம் அணிவதில்லை என தற்பெரு மையுடன் ஒட்டக்கூத்தர் கூறினார்.

உடனே புலவர் புகழேந்தி கனல் தெறிக்க ஒட்டக் கூத் தருக்கு பதிலடி கொடுத்தார். எங்கள் பாண்டிய அரசர்கள் புறமுதுகு காட்டி ஓடுகின்ற கோழைகள் மீது வேல் எறிந்து கொல்ல கனவிலும் நினைப்பதில்லை என்பதில் உங்கள் சோழ அரசர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளார்கள். எனவே தான்உங்கள்சோழ அரசர்கள் முதுகுக்கவசம் அணிவதில்லை என புகழேந்தி கூறியதும் ஒட்டக் கூத்தர் தலை குனிந்து வாய்மூடி மௌனி யானார்.



மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி யில் மாணவர் பகிஷ்கரிப்பு நடந்தது பழங்கதையாகி விட்டது. ஆனாலும் பகிஷ்கரிப்பின்போது வெளிச்சுவ ரில் எழுதப்பட்ட சுலோகங்கள் மட்டும் இன்னமும் அதை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

படம்: காத்தான்குடி நிருபர்

# தமிழைவிட ஆங்கிலத்தில் வேகமாக எழுத முடிவது ஏன்?

பொதுவாக எழுத்துக்கள் இடச்சுற்றாக அல்லது வலச் சுற்றாக அமையுமானால் ஒவ் வொரு எழுத்தையும் எழுதும் போது சிரமம் ஏற்படமாட் டாது.

தமிழ்ச் சொல்லை எழுதும் போது அவை அநேகமாக வலப்புறம் முடிபவையாக அமைவதில்லை. பல்வேறு எழுத்துக்களும் பல்வேறுதிசை களில் முடிகின்றன. ஒரு தமிழ் எழுத்தை எழுதும் போது அதன் முடிவு வலப்புறமாக அமையாது இருப்பதாலும் அடுத்த எழுத்தின் ஆரம்பம் இடது ஓரத்தில் தொடங்கப் படாது இருப்பதாலும் தமிழ் சொற்களை அமைக்கும்போது வேகத்தடை ஏற்படுகின்றது.

விரைவாக ஒரு தமிழ் எழுத்தை எழுதினாலும்கூட முடிக்கும்போது அதன் திசை எழுதும் திசைக்கு மாறாக இருப்பதால் வேகமாக எழுத முடிவதில்லை.

ஆனால் ஆங்கிலத்தில் அதிகமாகப் பயன்படுத்தும் (Small Letters) சிறிய எழுத் துக்களில் ஒன்றை எழுதும் போது அந்த எழுத்தின் முடிபு வலப்புறமாக அமைவதாலும் அடுத்த எழுத்தின் ஆரம்பம் இடது ஓரத்தில் தொடங் குவதாலும் ஆங்கிலச் சொற்களை இலகுவாகவும் வேகமாகவும் எழுத முடிகின் கின்றது. உதாரணமாக a என்ற எழுத்தின் முடிவு p என்ற எழுத்தை ஆரம்பிக்க இசைவாக வலது புறத்தில் முடிகின்றது. இதனால் ஒரு சொல்லை எளிதாகவும் விரை வாகவும் எழுத முடியும்.

தமிழில் ஒரு பக்கத்தை எழுதுவதற்கு 30 நிமிடங்கள் தேவைப்படின் அப்பக்கத்தை ஆங்கிலத்தில் எழுதுவதற்கு 20 நிமிடங்கள் போதுமான தாகும். எனவேதான் தமிழ் மொழியிலும் பார்க்க ஆங்கி லத்தை வேகமாக எழுத முடி கின்றது.

# கதம்பமாலை

**'யாழ்ராஜ்'**

## பறக்கும்பாம்புகள் உள்ளனவா?

உலகில் 61/2 கோடி ஆண் டுகளுக்கு முன்னர் பாம்பி னம் தோன்றியது. இன்று 2400க்கு மேற்பட்ட பாம்பி னங்கள் உலகில் உள்ளன.

இப்பாம்புகள் நிலத்தின் மீதும், நிலத்தின் அடியிலும், நீரிலும், மரங்களிலும் வாழ் கின்றன.

பாம்புகளுக்கு சிறகுகள் எதுவும் கிடையாது. ஆனால் சிலவகைப்பாம்புகள் நீண்ட தூரம் பாய்ந்து செல்வதைப் பார்த்தால் பாம்புகள் பறப் பது போலவே தோன்றும்

தென்னாசியாவிலும், கிழக் கிந்திய தீவுகளிலும் காணப் படும் **Uropeltidae** யுரோ வெல்டிடே என்ற ரகப் பாம்பு முக்கியமான தொன்றாகும். இலங்கையிலும், இந்தியாவி லும் காணப்படும்.

**(Golden Tree Snake)** கோல் டன் ரீ சினேக் முக்கியமான பறக்கும் பாம்பினமாகும்.

இப்பாம்புகள்பறக்கநினைக் கும் போது தமது உடலை விறைப்பாக வைத்துக் கொண்டுகீழ்ப்பக்கமாக அழுத் தும் போது உட்பக்கத்தில் குழிவான அமைப்புஏற்படுவ தால் இதற்குசிறிதுதூரங்களே பறந்து கடக்க இயலும். இவை மரத்தில் இருந்து நிலத்துக்கும், ஒரு மரத்தில் இருந்து இன்னொரு மரத் துக்கும் பறந்து செல்ல முடி யும்.

## மாற்றமடைந்து வரும் எஸ்கிமோ மக்கள்

வட அமெரிக்காவில் உள்ள அலாஸ்காவிலும், கிறின் லாந்து நாட்டிலும், சைபீரி யாவிலும் வாழும் ஆதிக்குடி களே எஸ்கிமோக்கள் ஆவர்.

மனிதன் தான் வாழ்ந்த பிர தேசத்தில் கிடைக்கப்பெற்ற பொருட்களைப் பயன்படுத் தியே தனது வீடுகளை அமைத் தான். இதற்கு ஏற்ப எஸ்கி மோவர் தாம் வாழ்ந்த பனிப் பிரதேசத்தில் பெறப்பட்ட ஒரே ஒரு பொருளாகிய பனிப் பாறையினைப் பயன்படுத்தி தமது வீடுகளை அமைத்துக் கொண்டார்கள்.

மிகக்குளிர் காலத்தில் எஸ்கி மோக்கள் வெண்பனிக்கட்டி களை சதுரம் சதுரமாக உடைத்து 'இக்ளு' எனப்படும் வீடுகளைக் கட்டிக்கொள்கின் றார்கள். இவ்வீடுகள் தேன் கூட்டின் வடிவத்தை ஒத்த தாகவும் விகாரை அமைப் புடையதாகவும் காணப்படும்.

பனிக்கட்டிகளை வட்டமாக வைத்து, வட்டத்தினுள் இருந்து வீட்டைக்கட்டி முடிந் ததும் வெளியே வருவதற்காக ஓரிடத்தில் பெரிய துவா ரத்தை ஏற்படுத்துவார்கள். இக்ளு வீட்டின் வாயிலைச் சுற்றி பனிக்கட்டியால் கட் டப்படும் குகை காணப்படும். குளிர்காலத்திற்கென கட்டப் படும் இவ்வீடுகள் கோடை காலத்தில் உருகிவிடும்போது பிராணிகளின் தோலினால் குடிசைகளைக் கட்டிக் கொள் கின்றார்கள்.

நாடோடிகளான எஸ்கி மோக்களின் வாழ்க்கையில் தற்பொழுது சிறிய மாற்றங் கள் ஏற்பட்டு வருகின்றன. வட அமெரிக்காவில் உள்ள அலாஸ்காவிலும், கிறின் லாந்து நாட்டிலும் வாழும் பெரும்பாலான எஸ்கிமோக் கள் தற்போது கற்கள், மரங்கள் என்பனவற்றைக் கொண்டு நிலையான வீடு களைக் கட்டி வசித்து வருகின் றார்கள். இவர்களின் உணவு, உடை, பழக்கவழக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வரு கின்றன. இவர்களின் பிள்ளை கள் பாடசாலைகளுக்கும் செல்கின்றார்கள்.

## வாழ்நாளில் நீரின்றி வாழும் பிராணி

புவியில் வாழும் உயிரினங்கள் யாவற்றுக்கும் நீர் இன்றியமையாதது. ஆனால் அமெரிக்காவின் தென் மேற்குப் பாலைவனத்தில் வாழும் கங்காரு எலி என்ற பிராணி தன் வாழ்நாளில் ஒரு முறை கூட தண்ணீர் குடிப்பது கிடையாது.

அவுஸ்திரேலிய நாட்டில் உள்ள கங்காரு என்ற பிராணியின் கால்களையும் வாலையும் ஒத்ததாக காணப்படும் ஓர் எலி இனமே இந்தக் கங்காரு எலி ஆகும்.

பொதுவாக மிகக் குறைந்த அளவு நீர் போது மானதாக உள்ள உடற்கூறு, பாலைவனத்தில் உள்ள உயிரினங்களுக்கு காணப்படும்.

இந்தக் கங்காரு எலி உணவாக உண்ணும் பாலை வனச் செடிகள், மற்றும் வேர்களில் இருந்து தனக்குத் தேவைப்படும் மிகக் குறைந்தளவு நீரைப் பெற்றுக் கொள்கின்றது. எனவே இந்தக் கங்காரு எலிக்கு பாலைவனச் செடிகளும், வேர்களும், உணவாகவும், நீராகவும் அமைந்து விடுகின்றன எனலாம்.

கங்காரு எலியின் கால்கள் அதன் உடலின் ஏனைய பகுதிகளை விட நீளமானவையாகும்.

# யானைகளும் கதைக்கின்றன!

உலகில் சிறிய யானைகள் சுமார் 4கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக நம்பப் படுகின்றது. ஆசியக்கண்டத் தின் தென்பகுதியிலும் ஆபி ரிக்கக்கண்டத்திலும் யானை கள் காணப்படுகின்றன.

மிகமெல்லிய ஒலியைக் கூட கேட்கின்ற ஆற்றலுடைய யானை சற்றுத் தொலைவில் உள்ள சுண்டெலியின் பாதச் சுவடுகளைக் கூட பார்க்கும் நுணுணிய பார்வைச் சக்தி கொண்டது.

யானைகள் பிளிறல் மூலம் ஓசை ஏற்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும் நமக்கு கேட்காத ஒலியினால் அவை தமக்குள் கதைத்துக் கொள் கின்றன. உண்மையில் யானை கள் தமக்குள் கதைக்கின்ற னவா என்பது பற்றிய ஆராய்ச்சி கென்யா, சிம்பாப் வே நமிபியா ஆகிய நாடுகளில் நடாத்தப்பட்டது. காடுகளில் யானைகளுடன் வாழ்ந்தோர் மூன்று கிலோ மீற்றர் பரப் பில் சிதறித் திரிந்து கொண் டிருந்த யானைகள் நீரைக் கண்டவுடனேயேஉடனடியாக அங்கு குவிவதைக் கண்டார் கள்; கூட்டமாகக் காணப் படும் யானைகள் அனைத்தும் திடீரென ஒரு கட்டளைக்கு கீழ்படிந்து நடப்பதைப்போல செயல்படுவதை அவதானித் தார்கள். யானைகள் எந்த விதமான பிளிறல் சத்தமும் செய்யாத நிலையில் இச்சம் பவங்கள் நிகழ்ந்தன.

நமீபியா காடுகளில்வீடியோ கமராக்களையும், ஒலிப்பதிவு கருவிகளையும் மறைத்து வைத்து யானைகளின் கேளா ஒலியையும் அதற்கு ஏற்ப யானைகள்செயல்படுவதையும் கண்டு பிடித்துள்ளார்கள்.

யானைக் கூட்டத்திற்கு பெண் யானைதான் தலை வியாக உள்ளது. யானைக் கூட்டம் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல் லும் பொழுது ஒன்றின் பின் ஒன்றாக வரிசையாகச் செல் கின்றன. வரிசையின் முன் னால் பெண் யானைகளும் குட்டிகளும் போகும். வரிசை யின் கடைசியில் ஆண்யானை கள் நடந்து செல்லும். குட்டி யானைகள் எதைச் செய்ய லாம் எதைச் செய்யக்கூடாது என்பதை தாய் யானைகள் கேளா ஒலி மூலம் கட்டளை இடுகின்றன. பொதுவாக ஆண்யானைகளைவிட பெண் யானைகளே அதிகமாக பேசு கின்றன.

# கைத்தறி உரிமையாளர்களின் தொழில் விபர அறிக்கை

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதேசக் கைத்தறி உரிமையாளர்கள் சங்கம் அதன் அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற தொழில் விபர அறிக்கையைப் பூர்த்தி செய்து கையளித்துள்ளது.

மட்டக்களப்பு கச்சேரியில் இயங்கும் புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தின் காத்தான்குடிப் பிரதேசக் கைத்தறித் துறை தொடர்பு உத்தியோகததர் ஜனாப் ஏ. நூர் முகம்மதுவிடம் 33 அங்கத்தவர்களினதும் விபரங்கள் கையளிக்கப்பட்டதாக மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜனாப் கே. எம். எம் சித்தீக் தெரிவித்தார்.

''இந்த 33உறுப்பினர்களிடமும் 92 சிறிய தறிகள் இயங்குகின்றன. இவற்றில் ஐந்து எதிர் காலத்தில் தான் இயங்கக்கூடியனவாகவுள்ளன'' தற்போது சங்க உறுப்பினர்களிடம் 199 ஆண் நெசவாளர்களும், 210 பெண் நெசவாளர்களும் 200க்கு மதிகமான துணைத் தொழிலாளர்களும் வேலை செய்கின்றனர்.

நாம்கேட்டுள்ள உதவிகளை அரசாங்கம் செய்து கொடுத்தால் இவ்வருட இறுதிக்குள் மேலும் 188 நெசவாளர்களுக்கும் 75 க்கும் அதிகமான துணைத் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கமுடியும்.

எமது சங்க உறுப்பினர்கள் மாதாந்தம் 30,000க்கும் அதிகமான சாரங்களை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் கூடிய விலை கொடுத்து உள்ளூரில் நூல், உபகரணங்களைக் கொள்வனவு செய்யவேண்டியிருப்பதால் சொற்ப இலாபத்தையே அவர்களால் பெறமுடிறது.

எமது சங்க உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 29,400 இறாத்தல் 50ம் இலக்க நூல் தேவைப்படுகிறது. இதை அரசாங்கம் மான்ய விலைக் கழிவில் எமக்கு வழங்கினால்தான் கைத்தறித் துறையை மேம்பாட்டிற்குக் கொண்டுவர முடியும்.

வருடாந்தப் பாவனைக்கு 595 (ஹீல்ஸ்) விழுதுகளும், அதேயளவு 80 X 54 ஆம் இலக்க அச்சுகளும், 2975 சட்டில்களும் சங்க உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகிறது.

பெருந்தொகையான(பேண்ஸ்) நூல் சுற்றும் குழல்களும், பபின்ஸ்களும் தேவைப்படுகின்றன.

எமது உறுப்பினர்கள் சூறாவளியினாலும், சமீபகால வன்செயல்களாலும் பெரிதும் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள். எனவே புடைவைக் கைத்தொழில் திணைக்களம் எமது சங்க உறுப்பினர்களுக்கு மேற்குறிப்பிட்ட நூல் மற்றும் துணை உபகரணங்களையும் மான்ய விலை அடிப்படையில் மாதாந்தம் விநியோகிக்க ஏற்ற நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்.

தொழில் அபிவிருத்திக்காக கோரப்பட்டுள்ள19,85,000/- ரூபா கடனையும் அரசாங்கம் சங்க உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## தேசிய விளையாட்டுவிழா சாவகச்சேரியில் நடைபெற்றது

(யாழ் விளையாட்டு நிருபர்)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற 16ஆவது தேசியவிளையாட்டு விழாவில் மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்தா விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

2ஆம் இடத்தை மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் 3ஆம் இடத்தைக் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் பெற்றன.

மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வெற்றி பெற்றோருக்கு திருமதி சசிதேவி சுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்கினார். விளையாட்டு அதிகாரி செல்வி யசோதா நன்றியுரை நிகழ்த்தினார். (42)

## நச்சுத்தன்மை மருந்துகள் கட்டுப்படுத்த சட்டமூலம்

(கொழும்பு)

தீங்கு விளைவிக்கக் கூடியதும் நச்சுத்தன்மையுடையதுமானமருந்துகளை கட்டுப்படுத்தும்தேசியசபை திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மனித சுகாதாரத்துக்கு ஒவ்வாத மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது குறித்து அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என சுதந்திரக்கட்சி எம்.பி.ரிச்சர்ட் பத்திரானா கூறினார்.

போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்கு உறுதியான திட்

கொள்கைத் திட்டமிடல் ராஜாங்க அமைச்சர்விமல் விக்கிரமசிங்கா பேசுகையில் போதைப் பொருள் கடத்துவோர் இலங்கையூடாக செல்வது தடுக்கப்பட வேண்டும் என்றார்.

## விரைவில் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் பதிப்பகத்தின் முதல் வெளியீடான ''ஒரு வேள்வி நடக்கிறது'' என்ற நூல் வெளியீட்டு விழா நடை

## மீன் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மீன் விலை மிகவும் அதிகரித்துள்ளது.

தற்பொழுது வீசும் சோழகக் காற்றினால்நாவாந்துறை, குருநகர், அல்லைப்பிட்டி போன்ற பகுதிகளில் வாழும் சிறு கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கடலில் நீர்ப்பெருக்கும், கடற் கலக்கமும் காணப்படுவதில் இப்பகுதி மீனவர்கள் தொழிற் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இதனால் நாவாந்துறை, கொட்டடி, குருநகர் போன்ற மீன் சந்தைகளில் கடந்த சில வாரங்களாக மீனுக்கு பெரும் தட்டுப்பாடுநிலவி வருகின்றது.

சந்தைக்கு விற்பனைக்கு வரும் மீன் பற்றாக்குறை காரணமாக என்றும் இல்லாதவாறு மீனின் விலை உயர்வடைந்து காணப்படுகின்றது. இதனால் வருமானம்குறைந்த மீன் நுகர்வோர்கள் மாற்று உணவுகளை நாடி மரக்கறிச் சந்தைக்குச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. (52)

## வெள்ளோட்டம்

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்துக்கு பல ஆயிரம் ரூபா செலவில் கட்டுத்தேர் ஒன்று செய்யப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

வெள்ளோட்ட விழா இன்னும் சில தினங்களில் நடைபெறும். (43)

## புதிய இயக்குனர்சபை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குனர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. திரு. நா. சங்கரப்பிள்ளையை தலைவராகக் கொண்டு பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு. மு. ஜெயராஜா, திரு. இ. அருள்நேசன் திரு இ மரியதாஸ், திரு. வே. பொன்னையா திரு. பி. நிக்கலஸ், செல்வி. கோ. யோகராணி.

## நிதி ஒதுக்கீடு

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசீர் சேகுதாவூத் (ஈரோஸ்) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில்இருந்து ஐம்பது ஆயிரம் ரூபாய் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மட்டக்களப்பு கச்சேரி திட்டமிடல் பகுதியால் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி பாடசாலை நலன் விரும்பிகள் கேட்கின்றனர். (29)

# வெளிநாடுகளை நம்பியிராது நாமே தயாரிக்க வேண்டும்

(காங்கேசன்துறை)

அந்நிய நாட்டிலிருந்து வரும் பொருள்களையோ, அன்றிஅந்நிய பிரதேசத்தில் இருந்து வரும் பொருட்களையோ நாம் நம்பியிருந்தோமாயின் காலக்கிரமத்தில் அப்பொருள் எமது பாவனைக்குக் கிடைக்காது விடும்போது நாம் கஷ்டமுறுவோம்.

எமது தேவைக்கு நாம் எம்மையே நம்ப வேண்டும். இதனால் எமக்கு பாரம்பரியமாக உதவிவந்த கைத்தறிகளைப் பயன்படுத்தி நாம்எமதுகாலில் நிற்கும் துணிவினை வளர்க்க வேண்டும். எமது உடைத் தேவை எம்மால் பூர்த்தியாக்கப்பட வேண்டும். அதுஎம்மால் இயலுமானதுமாகும். மின்தறிகளைமட்டும் நாம் நம்பியிருந்தோமாகில் மின்தடை மின்வெட்டு என்றும் அந்நியப் பிரதேசத்தடைச் செயற்பாடு எமது உடைத்தேவைக்குஅவர்களையே நம்பியிருக்க வைத்து விடும். இதனால் இப்பொழுதிலிருந்தேஎமதுசுயஉற்பத்தியை நாம் மேற்கொண்டு எமது காலில் நிற்கவேண்டும். இதற்காகவேநாம் கைத்தறிக் கிராமங்களை ஆரம்பித்து சுயதொழிலை ஊக்குவிக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

இவ்வாறு யாழ் மாவட்ட புடைவைக்கைத்தொழில் உதவிப்பணிப்பாளர் பத்தமேனியில் நடைபெற்ற கைத்தறிக் கிராம ஆரம்ப விழாவில்பேசும் போதுதெரிவித்தார்.

பத்தமேனி வடக்குகிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. மு. பொன்னுத்துரையின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் நெசவாளர்களையும் பற்றிய ஒரு மதிப்பீடு செய்யவிருப்பதாகவும் இதற்கானவிண்ணப்பப்பத்திரங்கள் அவ்வப் பிரதேச உதவிஅரசாங்க அதிபர் பணிமனையிலோ, அன்றி கச்சேரியிலுள்ள புடைவைக் கைத்தொழில் கிளையிலோ பெற்றுக் கொள்ளலாம் எனவும் இவ்வாறு மதிப்பிடப்பட்டு புடைவைக் கைத்தொழிலாளர்களுக்கு நிவாரண வங்கிக்கடன் உதவிகள் வழங்கி ஊக்குவிக்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

புதிதாக தொடங்கி வைத்த கைத்தறிக் கிராமத்தில் பத்துப்பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இவ்விழாவில்புடைவைக்கைத் தொழில்கிளை ஊழியர்களும் கிராமமுன்னேற்றச்சங்க அங்கத்தினர்களும் பங்கு பற்றினர். (41)

## சுவீடன் நிறுவனம் கோழிவளர்ப்புக்கு உதவி

(தெல்லிப்பளை)

சுவீடன் டயக்கோணியா நிறுவனம் குரும்பசிட்டிக் கிராமத்தில் இறைச்சிக்கோழி வளர்ப்பிற்கான அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்கு ஒன்றே கால் இலட்சரூபா வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கு பதினெட்டு வயதிற்கும் முப்பதைந்து வயதிற்கும் இடைப்பட்ட படித்தவறிய குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தைந்து பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிற்கு இறைச்சிக் கோழிவளர்ப்பு முறைகள் இலாபகரமாக மலிவு விலையில் தீன் தயாரித்தல் போன்றனவற்றில் பயிற்சிகள் வழங்கப்படும்

ஒவ்வொரு பயன்பெறுவோரிற்கும் தலா ஐய்யாயிரம் ரூபா வீதம் வங்கப்படும். இத்தொகை பணமாக அல்லது வ:திவீடம், ஐம்பது ஒருநாள் குஞ்சுகள், கோழித்தீன், மருந்துவகைகள் என்பனவாகவே வழங்கப்படுகின்றது.

தெல்லிப்பளை அரசகால் நடை வைத்திய அதிகாரியின் ஆலோசனைகள் வழிகாட்டல்களுடன் இத்திட்டத்தை யாழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கண்காணிப்புடன் சன்மார்க்கசபை விவசாயக் குழு நடைமுறைப்படுத்துகிறது. (26)

## 32 வருடம் பூர்த்தியாக்கப்படாத பாடசாலைக் கட்டடம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ சுப்ரமணிய மகளிர் வித்தியாலயத்தில் கடந்த முப்பத்திரெண்டு வருடங்களுக்கு முன்பு அத்திவாரமிடப்பட்டு சில தூண்கள் எழுப்பப்பட்ட நிலையில் பூர்த்தியாக்கப்படாத ஒரு கட்டிடம் அமைந்துள்ளது.

இக் கட்டிடத்தை புதிதாக அமைத்து தருமாறு கடந்த வாரம் இப்பாடசாலைக்கு விஜயம் செய்த கல்வித்திணைக்கள அதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இவ் வித்தியாலயத்திற்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாததும் நூல்நிலையம் இல்லாததும் பெரும் குறையாக இருப்பதாக வித்தியாலய அதிபர் செல்வி சு.. மகேஸ்வரி சுப்பிரமணியம் தெரிவித்தார். (22)

வாடிக்கையாளரே...

உங்களுக்கு வேண்டிய

❋ மர அரிவு வேலைகள்

## கட்டுப்படுத்தச் சட்டமூலம்

(கொழும்பு)

தீங்கு விளைவிக்கக் கூடிய தும் நச்சுத்தன்மையுடையது மான மருந்துகளை கட்டுப்படுத்தும் தேசியசபை திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மனித சுகாதாரத்துக்கு ஒவ்வாத மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது குறித்து அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என சுதந்திரக்கட்சி எம்.பி. ரிச்சர்ட் பத்திரானா கூறினார்.

போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களின் புனர் வாழ்வுக்கு உறுதியான திட்டம் அவசியம் தேவை என சுதந்திரக்கட்சி எம்.பி. கலீம் இஸாக் கூறினார்.

கொள்கைத் திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா பேசுகையில் போதைப் பொருள் கடத்துவோர் இலங்கையூடாக செல்வது தடுக்கப்பட வேண்டும் என்றார்.

---

## விரைவில் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் பதிப்பகத்தின் முதல் வெளியீடான ''ஒரு வேள்வி நடக்கிறது'' என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெறுவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக பதிப்பகத்தினர் தெரிவித்துள்ளனர்.

---

பெறும். (43)

## புதிய இயக்குனர்சபை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குனர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. திரு. நா. சங்கரப்பிள்ளையை தலைவராகக் கொண்டு பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு.மு. ஜெயராஜா, திரு. இ.அருள்நேசன் திரு. இ மரியதாஸ், திரு. வே. பொன்னையா திரு. பி. நிக்கலஸ், செல்வி. கோ. யோகராணி.

தெரிவின் போது கூட்டுறவுச் சங்க அலுவலர்களும் சமுகமாகி இருந்தனர். (62)

---

கப்பட்டுள்ளது. ஆயினும் இது வரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி பாடசாலை நலன் விரும்பிகள் கேட்கின்றனர். (29)

ரூபா வீதம் வழங்கப்படும். இத் தொகை பணமாக அல்லது வதிவிடம், ஐம்பது ஒருநாள் குஞ்சுகள், கோழித்தீன், மருந்துவகைகள் என்பனவாகவே வழங்கப்படுகின்றது.

கட்டிடம் அமைந்துள்ளது.

இக் கட்டிடத்தை புதிதாக அமைத்து தருமாறு கடந்த வாரம் இப்பாடசாலைக்கு விஜயம் செய்த கல்வித்தி

தும் பெரும் குறையாக இருப்பதாக வித்தியாலய அதிபர் செல்வி சு. மகேஸ்வரி சுப்பிரமணியம் தெரிவித்தார். (22)


## கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in BASIC Language**

ஆரம்பம்; 25th May 90 (திங்கள், புதன், வெள்ளி)
26th May 90 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

(O/L) படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.



**Unikco Computer Centre**

No. 5, Power House Road, 2nd Lane,
**JAFFNA.**

(B-1004)

---

வாகன உரிமையாளர்களே!

- உங்கள் சகலவிதமான வாகனங்களும் திறமையான முறையில் சுத்திகரிப்புச் செய்ய எங்களை நாடுங்கள்!
- சகலவிதமான மசகு எண்ணெய் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

வைபவங்களுக்குத் தேவையான
கதிரைகள், தகரப் பந்தல் வாடகைக்குக் கிடைக்கும்.

தேவை: உருக்குத் தளபாடங்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ்**

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(B. 959)

---

## வாடிக்கையாளரே...

உங்களுக்கு வேண்டிய

- **மர அரிவு வேலைகள்**
- **சீவல் வேலைகள்** — அனைத்திற்கும்

மற்றும்

உருக்குத் தளபாடங்களை
நவீன நாகரிக முறையில்
ஒப்பந்த அடிப்படையில் செய்து கொள்ளவும்......

அரசாங்க தளபாடங்களை
ஒப்பந்த முறையில்
குறித்த தவணையில்
செய்து பெற்றுக்கொள்ளவும்

# கிருஷ்ணாஸ்

**இருபாலை, கோப்பாய்.**

B-963

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 24 - 05 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

# தமிழீழத்திற்கு பொருளாதார வளமுண்டா?

தமிழீழம் கேட்கும் தமிழ் மக்களுக்குத் தமிழீழம் கிடைத்துவிட்டால் பொருளாதாரநிலை எப்படி இருக்கும்? பொருளாதாரத்தை எப்படிச் சமாளிப்பார்கள்?

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்த கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி மேற்கண்ட கேள்வியைக் கேட்டார்.

இந்த அதிகாரி மட்டுமல்ல வெளிநாட்டவர்கள் பலரும் ஏன் உள்நாட்டவர்களும்கூடக் கேட்கும் கேள்வி இது. சில வருடங்களுக்குமுன் தென்னிலங்கைச் சிங்கள அரசியல்வாதிகள் பலரும் இதே கேள்வியைத்தான் கேட்டுவந்தார்கள்.

1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் லிபரேஷன் ஒப்பரேஷன் அத்துலத்முதலியினால் நடத்தப்பட்ட சமயத்தில் வடபகுதிக்கு உணவுப் பொருள்களும் எரிபொருளும் தடை செய்யப்பட்டது. இது சில மாதங்கள் வரை நீடித்தது.

இதனால் மக்கள் சில கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தாலும் எவரும் பட்டினி கிடந்து உயிர் விடவில்லை. எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கு மக்கள் தயாராக இருந்தால் பொருளாதாரம் பெரும் பிரச்சினையாக இருக்க முடியாது.

யூதர்கள் பாலைவனத்தில்தான் குடியேற்றப்பட்டார்கள். இன்று இஸ்ரேல் நாடு சூழவுள்ள அரபுநாடுகளுக்குப் பெரும் தொல்லையாக இருக்கிறது. பொருளாதாரத்தில் இஸ்ரேல் பின்தங்கி நிற்கவில்லை.

நமது அயல் நாடான இந்தியா 1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றபோது அங்கு பிச்சைக்காரர்கள் தொகைதான் அதிகமாக இருந்தது.

1950 ஆம் ஆண்டில் இந்தியாவில் உணவு அமைச்சராக இருந்த கே. எம். முன்ஷி மக்களைப் பார்த்து பருத்திக்கொட்டை, புளியங்கொட்டை போன்ற கால்நடைத்தீனிகளை உண்ணும்படி கூறினார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அரிசிக்கப்பல் இந்தியாவின் பரிதாபநிலை கண்டு அங்கு திருப்பிவிடப்பட்டதும் அதேவருடத்தில்தான்.

நாற்பது வருடங்களின்பின் இன்று இந்தியாவின் முன்னேற்றம் பல துறைகளிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு வளர்ந்திருக்கிறது. தென்னாசியாவில் இன்று ஒரு குட்டி வல்லரசாக நிற்கிறது இந்தியா.

இஸ்ரேலும் இந்தியாவும் சாதாரண உதாரணங்கள். இன்னும் பல சிறிய பெரிய நாடுகளை உதாரணமாகக் காட்டலாம்.

தமிழீழத்தில் மூலவளங்கள் நிறைய இருக்கின்றன. இதுவரை இவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு ஆட்சிபீடத்துக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் முன்வரவில்லை.

---

மாகாணசபை கலைப்பு; 6 ஆவது திருத்தச்சட்ட நீக்கம் தாமதப்பட்டால்

# புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலப்பது தடைப்படலாம்

ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைக்கவும், அரசியல்யாப்பில்6-ஆவதுசட்டத்திருத்தத்தை ரத்துச் செய்யவும் தாமதப்படுத்துவதும் தமிழீழத்தில் அரசியல் சூனியத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, பிரேமதாஸாவின் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் ஸ்தம்பித நிலையை ஏற்படுத்தியுள்ளது. தேர்தலில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றுவதற்கான முக்கியமுன்னோடி நடவடிக்கையாக 6-வது சட்டத் திருத்தத்தை ரத்துச்செய்யும் படி விடுதலைப் புலிகள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர். ஆனால் அரசாங்கம் 6-வது சட்டத் திருத்தத்தை ரத்துச் செய்ய மறுத்து, வடக்கு-கிழக்கில் ஆளுநர் ஆட்சியைத் தொடரும் பட்சத்தில், விடுதலைப் புலிகள் ஜனநாயகத் தேர்தல் வழி முறைகளில் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் தடைபட்டு விடும்.

### ஈ.பி. ஆர். எல். எவ்க்கு நேசக்கரம்

ஈ.பி.ஆர். எல். எவ் வுடன் புதிதாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் எவரும் எதிர் பாராத வேளையில் மேற் கொண்ட திடீர் முடிவு, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆழ்ந்த எவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போது ஈ.பி.ஆர்.எல். எவ் வகித்து வந்த பாத்திரத்தை நன்குணர்ந்திருக்கும். அரசாங்கம், அவர்களை அணைத்துக் கொள்ள எடுத்த முடிவு அரசாங்கத்தின் உள் நோக்கத்தைப் பற்றிய ஒரு சந்தேகத்தைபுப்லிகள் வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ளன. விடுதலைப் புலிகள் கையில், மற்றவர்கள் நகைக்கத் தக்க வகையில் தோல்வியைத் தழுவிக் கொண்ட ஈ.பி.ஆர். எல்.எவ் தலைமைப்பீடமும். தமிழ்தேசிய இராணுவத்தினர் சிலரும் புலம் பெயர்ந்தும் இந்தியாவில் வாழ்கின்றனர். இந்திய இராணுவஆக்கிரமிப் பின பிணக்குழியிலிருந்து உயிர்த்தெழுவதற்கு ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் பக்கம் திரும்பியுள்ளது.ஈ. பி. ஆர்.எல். எவ் குழுவை இணைத்துக்கொள்ள கொழும்பு மேற் கொண்ட முடிவு, இனப்பிரச்சினைபற்றி விவாதிப்பதற்கும், முடிவு எடுப்பதற்கும் சர்வகட்சி மகாநாட்டைப் பொது மன்றமாகப் பாவிக்கும் தந்திரோபாயத்தைக் காட்டுகிறது. அரசாங்கம் சர்வகட்சி மகாநாட்டுக்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் 6 வது சட்டத் திருத்தத்தை இல்லாமலாக்குவதைக் காலவரையறைஇன்றிப் பின்போடுவதோடு, தமிழீழத்தில்அரசியல்சூனியத்தை நிரந்தரமாக நீடித்துவிடுதலைப்புலிகள்-அரசாங்கதரப்புப் பேச்சுவார்த்தைகளினால் ஏற்படும்அழுத்தத்தையும்நெருக்குவாரத்தையும்வெற்றிகொள்ள நினைக்கிறது. அரசாங்கத்தின் இப்புதிய தந்திரோபயாமானதுநிச்சயமாகவிடுதலைப்புலிகள்- —அரசாங்கம் பேச்சுவார்த்தைகளைப் பாதிப்பதோடு, தமிழ் மக்களினதும் விருப்பங்களைக் குறைத்து மதிப்பதாகவும் அமையும்.

### காலாவதியான கட்சிகளின் மகா நாடு

ஜனாதிபதியின்துவக்கமான சர்வகட்சி மகா நாடு, காலாவதியான கட்சிகளினதும், குழுக்களினதும் கூட்டமாகும். இக்கட்சிகளில் பல பல தசாப்தங்களாக அரசியல் ஏகாந்தத்தில் வாழ்ந்ததால், இக்கட்சிகளுக்குத் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதிப் படுத்துவதற்கு எந்த வகையிலும் உரிமை கிடையாது. விடுதலைப் புலிகள் சர்வகட்சி மகா நாட்டின் நடைமுறைகளில் பங்கு கொள்ளவில்லை என்றாலும், பார்வையாளர் நிலையில் கலந்துகொண்டு அவதானித்தனர். சர்வகட்சி மகா நாட்டைப் பேச்சு வார்த்தைகளுக்கான பிரதான மன்றமாக ஆக்குவது தான் அரசாங்கத்தின் புதிய அணுகு முறையென்றால், விடுதலைப் புலிகள் பார்வையாளர் அந்தஸ்து நிலையிலிருந்து விலகி, மகா நாட்டையும் பகிஷ்கரிக்க வேண்டிய நிலை ஏற்படும் காரணம், வழக்கில்லாத முக்கியமற்ற தமிழ் அரசியற் குழுக்களுக்கு தேவையற்ற முக்கியத்துவம் வழங்கப்படுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. ராஜீவ் காந்தியின் தலைமையிலான முன்னாள் இந்திய அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் விருப்பங்களுக்கும், அபிலாசைகளுக்கும் மாறாக ஈ பி ஆர். எல்.எவ் வையும், மற்ற ஆயுதச் குழுக்களையும் அரசியல் அதிகாரத்தில் அமர்த்தியதன் மூலம் இமாலயத் தவறை இழைத்துள்ளது. எமது மக்களைத் துன்புறுத்தியும் கொலைகள் பல புரிந்து அந்நிய சக்திகளின் பிரதிநிதிகளாகவும், பொம்மைகளாகவும் விளங்கிய குழுக்களை ஆதரிப்பதன் மூலம், இந்தியா இழைத்த பிழையை ஸ்ரீலங்கா அரசாங்கமும் இழைக்காது என்பது எமது உண்மையான நம்பிக்கையாகும். இக்குழுக்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக கூலிப் படைகளாகப்பாவிக்கும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆதரவு வழங்குமானால், இந்தத் துரோகத் தன்மையால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பாகக் கருதப்படும்.


தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்று எமது தலைவர் பிரபாகரன் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தார். ஆனால் சிங்கள அரசியல்த் தலைவர்களின் அறிவாற்றலிலும் பிரச்சினைகளை அணுகும் தன்மையிலும் எதிர்காலம் முற்றாகத் தங்கியுள்ளது. நியாயமும் நேர்மையுமான விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளைக் கரிசனையுடன் ஆராய்ந்து, விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பங்கு கொள்ளும் வகையில் சுமுகமான ஒரு சூழ்நிலையை அரசாங்கம் உண்டு பண்ணும் என்று நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம். ஜனநாயக முறையிலான தேர்தல்களினால் மக்கள் உண்மையும் நேர்மையுமான தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வார்கள்.

நன்றி;வெஸ் ஒப் ரைகேஸ்

---

# குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)



### திறந்த அகழிகள்

இவ் வகை அகழிகள் பொதுவாக பலர் கூடுமிடங்களுக்கு அருகிலேயே வெட்டப்பட வேண்டும். உதாரணமாக பாடசாலைகள், சந்தைகள், தியேட்டர்கள் போன்றவற்றினுள்ளோ அல்லது அருகிலோ இவை அமைக்கப்பட வேண்டும். இவை தவிர பிரதான சாலைகளில் கூடியளவு சனப் புழக்கம் உடைய சந்திகள் போன்ற இடங்களிலும் கூட இவற்றை வெட்டி வைக்கலாம். இப்போதுள்ள சூழ்நிலைகளில் அரச படைகள் ரோந்து வரக்கூடிய பிரதான வீதிகளில் இவற்றை அமைத்தல் விரும்பத்தக்கதல்ல. நீங்கள் அமைக்கும் இடங்களிலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பமொன்றின் போது அரச படையினர் கண்களில் பட்டு விடுமாயின் வேறு ஏதாவது கட்டுக்கதையொன்றை அவர்களை நம்ப வைக்குமாறு கூறுவதற்கு தயாராக இருப்பின் மிகவும் சிறந்ததாகும். ஆனால் தமிழீழப் போராட்டத்தின் உச்சக் கட்டக் காலங்களில் அரச படையினர் முகாம்களை விட்டு நேருக்கு நேர் வந்து சண்டையிடுவதை விட பெரும்

---

# நியமன ஆசிரியர்களுக்கு மூன்று நாள் பயிற்சி

1950 ஆம் ஆண்டில் இந்தியாவில் உணவு அமைச்சராக இருந்த கே. எம். முன்ஷி மக்களைப் பார்த்து பருத்திக்கொட்டை, புளியங்கொட்டை போன்ற கால்நடைத்தீனிகளை உண்ணும்படி கூறினார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அரிசிக்கப்பல் இந்தியாவின் பரிதாபநிலை கண்டு அங்கு திருப்பிவிடப்பட்டதும் அதேவருடத்தில்தான்.

நாற்பது வருடங்களின்பின் இன்று இந்தியாவின் முன்னேற்றம் பல துறைகளிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு வளர்ந்திருக்கிறது. தென்னாசியாவில் இன்று ஒரு குட்டி வல்லரசாக நிற்கிறது இந்தியா.

இஸ்ரேலும் இந்தியாவும் சாதாரண உதாரணங்கள். இன்னும் பல சிறிய பெரிய நாடுகளை உதாரணமாகக் காட்டலாம்.

தமிழீழத்தில் மூலவளங்கள் நிறைய இருக்கின்றன. இதுவரை இவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு ஆட்சிபீடத்துக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் முன்வரவில்லை.

மூலப்பொருள்கள் கிடைக்குமிடங்களில் அவற்றைப் பயன்படுத்தித் தொழிற்சாலைகள் அமைப்பதுதான் எந்த நாட்டிலும் பின்பற்றப்படும் வழக்கம்; இலங்கையைப் பொறுத்தவரையில் மூலப்பொருள்களை சம்பந்தப்பட்ட அமைச்சரின் தொகுதிக்கோ செல்வாக்குள்ள எம்.பி.யின் தொகுதிக்கோ ஏற்றுமதி செய்து தொழிற்சாலை உருவாக்குவது வழக்கம்.

இப்பொழுது வாழைச்சேனை காகிதத்தொழிற்சாலை திருக்கோணமலை பிறிமா ஆலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்து ஆலை என்பன இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளும் விஸ்தரிக்கப்படாமலும் ஏனோதானோ என்ற மனப்பான்மையுடனேயே செயல்படுகின்றன.

தமிழீழத்தில் கடற்றொழில் கவனிக்கப்படாத துறையாகவே இருந்து வருகின்றது. கடற்றொழில் திட்டமிட்டு விருத்தி செய்யப்பட்டால் தமிழீழத்துக்குத் தேவையான பொருளாதாரத்தில் பாதி சுலபமாகக் கிடைத்துவிடும்.

விவசாயத்திலும் உப உணவு உற்பத்தி, பணம் பொருள் உற்பத்தி என்று தமிழீழம் தனது பொருளாதாரத்தை விருத்தி செய்யப் பல வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தமிழீழத்தில் மூலவளங்களுக்கும் மூளை வளங்களுக்கும் உழைப்பு வளங்களுக்கும் குறைவில்லை. இதைக் காலம் உணர்த்தும்.

## பிழை திருத்தம்

நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் இஸ்லாமிய மகாநாடு என்பதற்குப் பதிலாக இஸ்ரேலிய மகாநாடு என வெளிவந்துவிட்டது. இத்தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

னுவ ஆக்கிரமிப்பின் போது ஈ.பி.ஆர்.எல்.எவ் வகித்து வந்த பாத்திரத்தை நன்கு ணர்ந்திருக்கும் அரசாங்கம், அவர்களை அணைத்துக் கொள்ள எடுத்த முடிவு அரசாங்கத்தின் உள் நோக்கத்தைப் பற்றிய ஒரு சந்தேகத்தைப் புலிகள் வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ளன. விடுதலைப் புலிகளின் கையில், மற்றவர்கள் நகைக்கத் தக்க வகையில் தோல்வியைத் தழுவிக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமைப்பீடமும், தமிழ்தேசிய இராணுவத்தினர் சிலரும் புலம் பெயர்ந்தும் இந்தியாவில் வாழ்கின்றனர். இந்திய இராணுவஆக்கிரமிப் பின போது இரக்கமற்ற முறையில் கோரக் கொடு தொழில் புரிந்த கொலைக் கூட்டத்தினரைத் தமிழ் மக்கள் மறக்கப் போவதில்லை. மக்களிலிருந்து பராதீனப்படுத்தப்பட்டு இந்திய அரசாங்கத்தினாலும் கைவிடப் பட்ட நிலையில், இக் குழுவானது அரசியல்ப்

தில் வாழ்ந்ததால், இக்கட்சிகளுக்குத் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதிப் படுத்துவதற்கு எந்த வகையிலும் உரிமை கிடையாது. விடுதலைப் புலிகள் சர்வகட்சி மகா நாட்டின் நடைமுறைகளில் பங்கு கொள்ளவில்லை என்றாலும், பார்வையாளர் நிலையில் கலந்துகொண்டு அவதானித்தனர். சர்வகட்சி மகா நாட்டைப் பேச்சு வார்த்தைகளுக்

பொறுப்பாகக் கருதப்படும்.

தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்று எமது தலைவர் பிரபாகரன் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தார். ஆனால் சிங்கள அரசியல்த் தலைவர்களின் அறிவாற்றலி

# நியமன ஆசிரியர்களுக்கு மூன்று நாள் பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1988/89 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சி திங்கட்கிழமை முடிவுற்றது.

இப்பயிற்சி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில்19ஆம் திகதி ஆரம்பமாகியது.

அத்துடன் அண்மையில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (58)

# மாநகர சபை செயற்படுமா?

ஆசிரியர்,
ஈழநாதம்,

யாழ்ப்பாண நகரின் போக்குவரத்தை சீர்செய்ய முற்பட்டிருக்கும் யாழ்.மாநகர சபையினர் ஒரு முக்கிய விஷயத்தைக் கவனத்திற் கொள்ளவில்லை. யாழ். நகரத்தின் பிரதான வீதி ஸ்ரான்லி வீதியாகும். இது தான் நகர வீதிகளிலேயே அகலமானதும், இரண்டு புறநகர் பிரதானவீதிகளான மானிப்பாய் வீதி, காங்கேசன்துறை வீதி வாகனப் போக்குவரத்தை நகருக்குள் கொண்டுவருவதுமாகும்.

இந்த வீதியில் மிட்டாய் சந்தியில் இருந்து மணிக்கூட்டு வீதிச் சந்தி வரை உள்ள பகுதியில் வாரத்தில் மூன்று நாட்கள் ஒரு பக்கத்திலும் ஏனைய மூன்று நாட்கள் எதிர்ப் பக்கத்திலுமாக வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற சட்டம் முன்பு இருந்தது. தற்போதும் அந்த அறிவித்தற் பலகைகள் அவ்வீதியில் உள்ளன. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முன்பு இவ்வீதியில் 2 நகர்க்காவலர்கள் இருந்தனர். தற்போது அச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட நகரின் பாதிப் பிரச்சினை தீர்ந்து விடும்.

இந்த வீதியில் உள்ள பெரும்பாலான கடைகளில் கொழும்பில் இருந்து வரும் லொறிகள் பொருட்களை இறக்குவது ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்றது. அத்தோடு இக்கடைகளில் இருந்து குடாநாடு முழுவதற்கும் சாமான்கள் எடுத்துச் செல்லப்படுவதற்காக சிறு லொறிகள், வண்டிகள், ஏன் மினிபஸ்கள் கூடப் பயன் படுத்தப் படுகின்றன. இந்த வேலைகள் அனைத்தும் போக்குவரத்துக் கூடிய வர்த்தக நேரங்களிலேயே செய்யப் படுகின்றன. பொருட்கள் கடைகளில் இறக்குவது, ஏற்றுவது போன்ற வேலைகள் மாலை 8.30 மணியில் இருந்து காலை 6.30 மணி வரை தடை செய்யப்பட வேண்டும்.

மஸ்கன்ஸுக்கு முன்னால் நிறுத்தப் பட்டிருக்கும் வாகனங்கள் இந்த ஸ்தாபனத்துக்குள் நுழைய முற்படும் போதும் வெளியே வரும் போதும் போக்குவரத் துத் தடை ஏற்படுகின்றது. இதற்கு அந்த ஸ்தாபனம் மாற்று ஒழுங்கு ஏதாவது செய்ய வேண்டும்.

## மக்கள் மடல்

இவ்வீதியில் உள்ள இரும்புக் கடைகள் முற்றாக மூடப்பட வேண்டும். அல்லது மாலை 6.30 மணிக்கு பின்பே இவை செயற்பட அனுமதிக்கப் படவேண்டும். கடையிலிருந்து வாகனத்துக்கு ஏற்றுவதற்காக நீண்ட இரும்புக் கம்பிகள் வெளியே வீதியின் நடுவண் பகுதிக்கு கொண்டு வந்தே திருப்பி ஏற்றுகின்றார்கள். இந்த வீதியில் பயணம் செய்யும் எத்தனையோ பிரமுகர்கள் இவ்விஷயத்தை மாநகர சபைக்கு அறிவிக்காமல் இருப்பது புதிராக இருக்கின்றது. பேராசிரியர் செல்வநாயகம் இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் எடுத்துச் செல்லப்பட்ட நீண்ட கம்பி ஒன்றுக்குத்தான் பலியானார். என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும்.

வெலிங்டன் சந்தியில் முனீஸ்வரா கபே மூலையில் ஆட்டோக்கள் நிரந்தரமாக நிறுத்தப் பட்டுள்ளன. இது ஸ்ரான்லி வீதியில் இருந்து மணிக் கூட்டு வீதியின் வடபகுதிக்குத் தடையின்றி எப்போதும் செல்லக் கூடிய பாதையைத் தடை செய்கின்றது. இந்த ஆட்டோக்கள் பி.எம்.சி.க்கு அருகில் உள்ள ஒழுங்கையில் அல்லது பி.எம்.சி.க்கு முன்பு உள்ள வெளிப் பகுதியில் நிறுத்துவதன் மூலம் பிரச்சனையைத் தீர்க்கலாம்.

இந்த வீதியில் உள்ள வாகன திருத்தகங்களை (கராஜ்) இங்கிருந்து அகற்ற வழி காணப்பட வேண்டும். இத் திருத்தகங்களில் வாகனங்கள் வீதியிலேயே வைத்துத் திருத்தப் படுகின்றன. இது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதோடு இத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும்.

யாழ்.மாநகர சபை மேற் கூறிய நடவடிக்கைகளை மேற் கொண்டால் யாழ் நகரத்தின் பெரும்பாலான போக்குவரத்து இடைஞ்சல் களையப் பட்டு விடும் என்பதில் ஐயமில்லை. உடன் செயற்படுவார்களா?

சு.நடராசன்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# முத்தமிழ் மன்றத்தின் நாட்டுக்கூத்து நிகழ்ச்சி

(நாவாந்துறை)

மெலிஞ்சி முனை முத்தமிழ் மன்றம் வழங்கிய நாட்டுக் கூத்து நிகழ்ச்சி சென்ற 16ஆம் திகதி புதன் கிழமை யாழ்-நாவாந்துறை சென் மேரிஸ் முத்தமிழ் அரங்கில் நடைபெற்றது.

நாவாந்துறை பங்குத்தந்தை வரை யூயின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு யாழ். ஆயர் வண தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

பாட்டுக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கும் பாரம்பரிய நாட்டுக் கூத்துக்களைப் போலன்றி ஆட்டத்துக்கும் பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்து புதிய மெருகேற்றத்துடன் அரங்கேற்றப்பட்ட இந் நாட்டுக் கூத்து யாழ் பல்கலைக் கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பாலசுந்தரம் அவர்களினால் நெறியாள்கை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (52)

இவ் வகை அகழிகள் பொதுவாக பலர் கூடுமிடங்களுக்கு அருகிலேயே வெட்டப்பட வேண்டும். உதாரணமாக பாடசாலைகள், சந்தைகள், தியேட்டர்கள் போன்றவற்றினுள்ளோ அல்லது அருகிலோ இவை அமைக்கப்பட வேண்டும். இவை தவிர பிரதான சாலைகளில் கூடியளவு சனப்புழக்கம் உடைய சந்திகள் போன்ற இடங்களிலும் கூட இவற்றை வெட்டி வைக்கலாம். இப்போதுள்ள சூழ்நிலைகளில் அரச படைகள் ரோந்து வரக்கூடிய பிரதான வீதிகளில் இவற்றை அமைத்தல் விரும்பத்தக்கதல்ல. நீங்கள் அமைக்கும் இடங்களிலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பமொன்றின் போது அரச படையினர் கண்களில் பட்டு விடுமாயின் வேறு ஏதாவது கட்டுக்கதையொன்றை அவர்களை நம்ப வைக்குமாறு கூறுவதற்கு தயாராக இருப்பின் மிகவும் சிறந்ததாகும். ஆனால் தமிழீழப் போராட்டத்தின் உச்சக் கட்டக் காலங்களில் அரச படையினர் முகாம்களை விட்டு நேருக்கு நேர் வந்து சண்டையிடுவதை விட பெருமளவு ஆகாய விமானத் தாக்குதல்களிலேயே ஈடுபடுவார்கள். அக் கால கட்டங்களில் இவ் வகை அகழிகள் பெருமளவில் அமைக்கப்படுதல் வேண்டும்.

ஒற்றை அகழி ஒன்றானது 8 அடி நீளமும், இரண்டரை அடி அகலமும், 3 தொடக்கம் 4 அடி வரை ஆழமும் கொண்டதாக இருக்க வேண்டும். இங்கு ஒரு நபருக்கு 4 சதுர அடி நிலப்பரப்பு தேவை என்பதால் மேற் கூறப்பட்ட அகழியினுள் ஐவர் மாத்திரமே பதுங்கக் கூடியதாக இருக்கும். மேலும் அதிகமானவர்களுக்காக திறந்த அகழிகள் வெட்டப்படும் போது ஒற்றை அகழி ஒன்றினை அப்படியே நீளத்தை அதிகரித்து பாவித்தல் புத்திசாலித்தனமல்ல. பதிலாக, முன்னர் அமைத்த அகழியுடன் தொடர்பானதாக, ஆனால் அதனுடன் 80 பாகைக்கும், 100 பாகைக்கும் இடைப்பட்ட கோணமொன்றை (அண்ணளவாக செங்குத்தாக) அமைக்கக் கூடியவாறு வேறொரு ஒற்றை அகழி ஒன்று 8 அடி நீளத்துக்கு வெட்டப்படலாம். இவ்வாறே மேலும் அதிகமானவர்களுக்காக, அலை வடிவத்தில் தொடர்ச்சியாக அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அமைக்கப் படும்போது முழு நீளம் 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அவ்விடத்தில் மேலும் அகழி அமைக்க வேண்டிய தேவை ஏற்படுமாயின், முன்னர் அமைக்கப்பட்ட அலை வடிவ அகழி அமைப்பில் இருந்து 45 அடிக்குக் குறையாத தொலைவிலேயே அடுத்த அகழி வரிசை அமைக்கப்பட வேண்டும். இவ்வகை திறந்த அகழிகளானவை கட்டிடங்கள்கள் யாவற்றுக்காவது அருகில் அமைக்க வேண்டி இருப்பின், கட்டிடத்தின் உயரத்தின் அரைப் பங்கு தூரத்திலும் கூடியளவு தொலைவிலேயே அமைக்கப்பட லேண்டும். குண்டு வீச்சின்போது அக் கட்டிடம் இடிந்தால், அதன் உடை பகுதிகள் அகழியினுள் சிதறாது தடுப்பதற்காகவே மேற் கூறியவாறு அமைக்கப்பட வேண்டியுள்ளது.

பொதுவிடமொன்றில் இவ் வகையான அகழிகள் அமைக்கப்பட்டிருப்பின், அவ் விடத்திற்கு வந்து போகின்ற அனைவருக்கும் அது அமைந்திருக்கும் இடமும், அதனை அடையும் பாதையும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். ஏற்கனவே தீர்மானிக்ககப்பட்ட ஒரு சமிக்ஞை ஒலி கேட்டவுடனேயே அவ்விடத்திலுள்ளவர்கள் உடனடியாக ஓடிச் சென்று அகழிகளினுள் குதித்து, பதுங்குதலை இடையிடையே பயிற்சியாக செய்து வைத்திருத்தல் சிறந்ததாகும். முக்கியமாக பாடசாலைகளில் இவைஅவசியம்பயிற்றப்படுதல் வேண்டும். இதற்காக நீங்கள்உங்களுக்குள்ளேயே சிறு அமைப்பொன்றை ஏற்படுத்தி ஒழுங்கான முறையில் செயற்படுதல் விரும்பத்தக்கதாகும். அகழிகளினுள் ஓடிச் சென்று குதிக்கும் போதும், அனைவரும் ஒரு சேர ஓரிடத்தை நோக்கி ஓடிச் சென்று குதிக்காமல் பரந்து சென்று இயலுமானவரை ஐதாக முழு அகழிகளினுள்ளும் மறைப்புத் தேடுதல் கூடியளவு பாதுகாப்பைத் தருவதோடு விரைவாக செயற்படக் கூடியதாயும் இருக்கும்.

(தொடரும்)

Registered as a News Paper at the G. P. O

ஈழநாதம்

## உலகத்தமி[illegible] முதலாவது மகாநாடு

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் முதலாவது மகாநாட்டைக் கலை கலாசாரம் ஆய்வரங்கம், கண்காட்சி போன்ற பல அரிய அம்சங்களுடன் நடாத்தத் தீர்மானித்துள்ளது. இந்த மகாநாட்டுக்குச் சர்வதேச நாடுகளில் இருந்தும் பேராளர்கள் பெருமக்கள் வருகைதரவுள்ளனர் என இயக்கத்தின் கிளைச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

1974ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் பின்னர் எதுவித கலாசார மகாநாடுகளும் யாழ்ப்பாணத்தில் இதுவரை நடைபெறவில்லை. நடைபெறக்கூடிய சூழ்நிலையும் இல்லாமலிருந்ததை நாம் எல்லோரும் அறிவோம்.

இலங்கைக் கிளையின் மகாநாடு மே மாதம் நடைபெற இருந்தது. சில தவிர்க்கமுடியாத காரணத்தால் தமிழர் பண்பாட்டு இயக்க மகாநாடு வெளிநாட்டுப்பேராளர்களின் வருகையின் தாமதத்தாலும் எதிர்வரும் ஆவணி மாதப் பிற்பகுதியில் நடாத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாநாட்டை முன்னிட்டு கடந்த சித்திரை மாதம் யாழ். மத்திய கல்லூரியில் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. (24)

## ஒருவிலுக்கு மின்மாற்றி இல்லை

(களுவாஞ்சிகுடி)

ஒருவில் கிராமத்திற்கு பொருத்துவதற்கென களுவாஞ்சிகுடி பிரதேசசபை, இலங்கை மின்சார சபைக்கு விசேட ஒதுக்கீடின் கீழ் ரூபா ஒரு இலட்சத்து நாற்பத்தேழாயிரம் ரூபா செலுத்திப் பல வருடங்களாகியும், மின்சார சபையால் இன்னமும் மின்மாற்றியை வழங்கவில்லை இதனால் ஒருவில் கிராம மக்கள் பிரதேசசபை மீது சந்தேகம் கொண்டுள்ளனர். பிரதேசசபை இது தொடர்பாக தொடர்முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றது. (45

### தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு

# மலையக மக்களுக்காக குரல் கொடுத்ததற்கு

# தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி நன்றி

(கொழும்பு)

மலையகத் தோட்டத்தொழிலாளர்களான இந்திய வம்சாவளியினரை நாடு கடத்தும் அரசின் நோக்கத்திற்கு எதிராக வடக்கு இழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய ஹர்த்தாலை வரவேற்பதாகவும் விடுதலைப் புலிகளைப் பாராட்டுவதாகவும் மலையகத் தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியின் அமைப்பாளரும் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் தலைவருமான எஸ். நடேசன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம்மாலைகொழும்பில்கலெக்ஸிஹோட்டலில் தாயகம் திரும்புவோர் நிலைமையை விளக்க மலையகத் தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடாத்தியது. அம் மகாநாட்டில் நடேசன் மேலும் கூறியதாவது.

மலயகத் தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பில்லை என்றாலும் அவர்கள் மலையக மக்கள்மீது கொண்டிருந்த ஆர்வத்தை நாம் மதிக்கிறோம்.

உள்ளூர்ப்பத்திரிகையாளரும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் பலரும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஏ. முத்துலிங்கம், இரா. சந்திரமோகன், டாக்டர் சுனில் ரத்தினபிரிய, வி. எல். பெரெரா, மைக்கல் யோசப் பெ. முத்துலிங்கம், ஆர். எஸ். சண்முகம் ஆகியோர் கூட்டுக் கமிட்டியின் சார்பில் கலந்து கொண்டனர்.

### மட்டக்களப்பு

## ஆசிரியர் புதன் மட்டுமே காரியாலயத்திற்குச் செல்லலாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்வி இலாகாவிற்கு ஆசிரியர்கள் புதன் கிழமைகளில் மட்டும்தான் சமுகமளிக்க வேண்டும் என மாவட்ட கல்விப் பணிப்பாளர் கு. சோமசுந்தரம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விடுமுறை நாட்களில் கூட அலுவலகம் வருகை தந்து ஊழியர்களை சந்திப்பதற்கும் அவரது உத்தரவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவசர அலுவல்களுக்கு சமுகமளிப்பதென்றால் கொத்தணி அதிபரின் அனுமதியுடன் அதிபர்கள், அதிபர் அனுமதியுடன் ஆசிரியர்கள் சமுகமளிக்கலாம்.

மதிய உணவு தொடர்பான அலுவல்களுக்கு குழுவிலுள்ள ஆசிரியர் மட்டும் வியாழன், வெள்ளி நாட்களில் சமுகமளிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (37)

## புங்குடுதீவில் குடிநீர் தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

வேலணை, புங்குடுதீவுக் கிராமங்களில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. வானம் பார்த்த் பூமியில் கடும் வறட்சி காரணமாகக் கிணறுகள் வற்றிய நிலையில் உள்ளன.

அயலூரான சாட்டியில் குடிநீர்க் கிணறு வற்றாமல் இருப்பதால் மக்கள் அதிகாலையிலேயே குடங்களுடன் அங்கு சென்று நீரை மொண்டு செல்கிறார்கள். இரண்டு கலன் கொள்ளவு கொண்ட ஒரு குடம் தண்ணீர் இப் பகுதிகளில் ரூபா 2க்கு விற்பனையாகிறது.

## போக்குவரத்துச்சீர்கேட்டால் ஊழியர்கள் நேர தாமதம்

(மட்டக்களப்பு)

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை ஆலை ஊழியர்கள் ஒழுங்கான பஸ், ரயில் போக்குவரத்து வசதியின்றி உரிய நேரத்தில் கடமைக்கு சமுகமளிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

மட்டக்களப்பு - கொழும்பு காலை 6.45 ஹிஜ்ரா ரயில் உரிய நேரத்தில் புறப்படுவதில்லை.

மட்டக்களப்புபஸ் நிலையத்தில் இருந்து நேர அட்டவணையின் பிரகாரம் பஸ சேவை இல்லை.

இந்நிலையில் கடமைக்கு உரியநேரத்தில் சமுகமளிக்க முடியாதநிலையில்ஊழியர்கள் உள்ளனர்.

இதுகுறித்து போக்குவரத்துச் சேவையுடன் தொடர்புடைய அமைச்சர்கள், அதிகாரிகளுக்குஅவசர தந்திகளை ஊழியர் சங்கம் அனுப்பி வைத்துள்ளது. (37)

## 1990 வாக்காளர் இடாப்பு முதற்கட்டப்பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளாக தற்போது யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளரால் ஒவ்வொரு கிராம சேவையாளர்களுக்கும் வாக்காளர் இடாப்பு போதனை வகுப்புகள் நடத்தப் பட்டுவருகிறது,

வாக்காளர் இடாப்பு தயாரிக்கவேண்டிய ஆவணங்கள் அவற்றுடன் சமர்ப்பிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் என்பனபற்றி தேர்தல் ஆணையாளரால் கிராம சேவையாளர்களுக்கு இவ்வகுப்புக்களில் முறைப்படி பயிற்சியளிக்கப் பட்டு வருகிறது. இப் பயிற்சியளிப்பு வகுப்புகள் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் யாழ். மாவட்டத்திற்கும் யாழ். தேர்தல் ஆணையாளரால் நடாத்தப்படுகின்றது) (லோ.

### யாழ். மாவட்டத்திற்கான

## உழவு இயந்திரங்கள் கொழும்பிலும் குருநாகலிலும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கமநல சேவை திணைக்களத்துக்கென ஒதுக்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த உழவு இயந்திரங்கள் கொழும்பிலும் குருநாகலிலும் தேங்கிக் கிடக்கிறது. இவ் உழவு இயந்திரங்கள் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு குறைந்த வாடகை அடிப்படையில் வாங்குவதற்காக கொண்டுவர இருப்பதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

இது பற்றி யாழ் மாவட்ட கமநல சேவை அதிகாரிகள் கொழும்பு கமநல சேவை ஆணையாளருக்குத் தெரிவித்தபோது போக்குவரத்துப் பிரச்சினை இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த உழவு இயந்திரங்களை யாழ் மாவட்டப் பிரதான கமநல சேவைகள் அலுவலகத்திற்கு கொண்டு வருவதற்கு விசேட வாகனங்கள் தேவை என ஆணையாளர் தெரிவித்ததாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார் (லோ).

## தபால் அதிபர்கள் தகவல் கொடுப்பதற்கு தடை

(மட்டக்களப்பு)

தபால் அத்தியட்சகர்கள், தபால் அதிபர்கள் பத்திரிகைகளுக்கு தகவல்கள் கொடுபபது தடை செய்யப்பட்டுள்ளது.

அஞ்சல் மா அதிபரினால் இது தொடர்பான சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செய்திக்குரிய விபரம் அஞ்சல் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்பு அவரின் அனுமதி கிடைத்தவுடன் பத்திரிகைகளுக்கு கொடுக்கலாம் என அவர் அறிவித்துள்ளார்.

## பயிற்சி முடித்தவர்களுக்கு ஆசிரியர்களுக்குரிய சான்றிதழ்

## புலிகளுக்குச்

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒரு நீண்ட கட்டுரையை பிரசுரித்தது.

இந்திய யுத்தத்தில் புலிகள் ஈட்டிய வெற்றி காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கம்

## அமெரிக்க தகவல் நிலையம் யாழ்நகரில் அமைக்கக் கோரிக்கை

கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க தகவல் நிலையங்களைப்போல் ஓர் நிலையத்தை யாழ்ப்பாணத்திலும் விரைவில் நிறுவ ஐக்கிய அமெரிக்க தகவல் நிலையப் பகுதி முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இத்தகவல் நிலயத்தை நிறுவுவதன் மூலம் அமெரிக்காவின் முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து கொள்வதோடு, யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அது பயன்

நாவலர் மண்டபத்தில் இடம் பெற்ற இப் புத்தகக்

லைக்கழகத் துணைவேந்தர் ஏ. துரைராசா நேற்றுமாலை ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையமும் யாழ். பொதுசன நூலகமும் இணைந்து நடாத்திய அமெரிக்காவின் உயர் கல்வித் தோற்றத்தில் மாற்றம் என்ற புத்தகக் கண்காட்சியை குத்துவிளக்கேற்றி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

கழகத் துணைவேந்தர் ஏ. துரைராசா ஒரு தகவல் நிலையம் யாழ்நகரில் அமைக்கப் படவேண்டும் என்று விடுத்த கோரிக்கை கரிசனையுடன் கவனத்திற் கொள்ளப்பட்டு, ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையம் யாழ்நகரில் ஆரம்பிப்பது பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும் என்றார்.

நேற்றைய இவ் வைபவத்தில் விசேட அழைப்பின் பேரில் புத்தி ஜிவிகளும், பத்திரிகையாளர்களும், முக்கியஸ்

[illegible] பொருட்கள்

# தபால் அதிபர்கள் தகவல் கொடுப்பதற்கு தடை

(மட்டக்களப்பு)

தபால் அத்தியட்சகர்கள், தபால் அதிபர்கள் பத்திரிகைகளுக்கு தகவல்கள் கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

அஞ்சல் மா அதிபரினால் இது தொடர்பான சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செய்திக்குரிய விபரம் அஞ்சல் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்பு அவரின் அனுமதி கிடைத்தவுடன் பத்திரிகைகளுக்கு கொடுக்கலாம் என அவர் அறிவித்துள்ளார்.

# பயிற்சி முடித்தவர்களுக்கு ஆசிரியர்களுக்குரிய சான்றிதழ்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஆசிரியர் பயிலுநராக நியமனம் பெற்று, கற்பித்தல் பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

வவுனியா தெற்கு தமிழ் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர்பிரிவு, நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா மகளிர் மகா வித்தியாலயத்தில் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நடைபெற்றது. இவ் வைபவத்தில் வவுனியா கல்வி அதிகாரி திரு. நவரட்ணராஜா கலந்து கொண்டார்.

இவ் விழாவின் போது, மேற்படி ஆசிரியர்களின் படைப்புகள் அடங்கிய மலர்கள் வெளியிடப்பட்டது. (தி)

## மட்டக்களப்பு

# வாடிவீடு மீண்டும் திறக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாடி வீடு மீண்டும் திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் நாடு நகர அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாடிவீடு முப்பு பெற்றுக் கொண்ட ஒப்பந்தக்காரரின் ஒழுங்கீனம் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய ஒப்பந்தக்காரர் மூலம் வாடிவீடு செயல்படவிருக்கிறது. இதற்கான கேள்விப் பத்திரம் தற்போது கோரப்பட்டுள்ளது.

அதேநேரம் வாடிவீடு இந்தியப்படை முகாம் அமைக்க எடுக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பு என சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்ற இரு குளிர்சாதனப் பெட்டிகள் இதுவரை மீள ஒப்படைக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரி பிற மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று பலமாதங்களாகியும் ஒப்படைக்கப்படவில்லையாம்.

அன்று செயல்பட்ட இரு குளிர்சாதனப் பெட்டிகளும் செயலிழந்து அவ் அதிகாரி வீட்டில் பாவனைக்கு உதவாத நிலையில் இன்று இருப்பதாக ஈழநாதத்திற்குத் தகவல்கள் கிடைத்தன. (37)

## இந்திய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் குறிப்பிடும்போது மாணவ மாணவிகள் தெரிவு முழுக்க முழுக்க இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்ததென்றும் அவர்கள் சிபார்சு செய்வோரே புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு இந்திய பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவரென்று கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நீர்க் கிணறு வற்றாமல் இருப்பதால் மக்கள் அதிகாலையிலேயே குடங்களுடன் அங்கு சென்று நீரை மொண்டு செல்கிறார்கள். இரண்டு கலன் கொள்ளவு கொண்ட ஒரு குடம் தண்ணீர் இப் பகுதிகளில் ரூபா 2 க்கு விற்பனையாகிறது.

## புலிகளுக்குச்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒரு நீண்ட கட்டுரையை பிரசுரித்தது.

இந்திய யுத்தத்தில் புலிகள் ஈட்டிய வெற்றி காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் நாட்டில் மிகவும் பிரபல்யம்பெற்று வருகிறது. புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஒரு மாபெரும் விடுதலை வீரராக கௌரவிக்கப்படுகிறார். இந்தப் புலிகள் அலை தமிழகமெங்கும் தலைதூக்குவதை கண்டு கிலி கொண்ட இந்திய உளவு ஸ்தாபனமாகிய 'றோ' புலிகளுக்கு களங்கம் தேடும் முயற்சியில் சில பிரபல்ய இந்திய பத்திரிகைகளைப் பயன்படுத்துவதாக நம்பகமான வட்டாரங்கள் கூறுகின்றன. தமிழீழப் பிரச்சினையில் புலிகளால் முகத்தில் கரி பூசப்பட்ட சில 'றோ' அதிகாரிகள் தனிப்பட்ட குரோதத்தினால் இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டு வருவதாகவும் இந்த வட்டாரங்கள் கூறின. கலைஞர் கருணாநிதியையும் புலிளையும் முடிந்துவிடுவதும் இந்த சதியின் ஒரு அம்சம் என்றும் கூறப்படுகிறது.

## வவுனியாவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கும், வவுனியா - கண்டி வீதியில் தற்போது அமைக்கப்பட்டு வரும் பொலிஸ் நிலையத்திற்கும் இடம் மாறிச் செல்வதைக் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

மிகக் குறைவான பொலிஸாரே நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ளனர். (தி)

## மாத

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையச் சில்லறைக் கிளைகள் மூலம் விநியோகிக்கப் படுகின்றன.

பீதியடைந்து கூடுதலான விலை கொடுத்து வெங்காயத்தை வாங்க வேண்டாமென கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பாவனையாளர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

# யாழ்நகரில் அமைக்கக் கோரிக்கை

கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க தகவல் நிலையங்களைப்போல் ஓர் நிலையத்தை யாழ்ப்பாணத்திலும் விரைவில் நிறுவ ஐக்கிய அமெரிக்க தகவல் நிலையப் பகுதி முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இத்தகவல் நிலயத்தை நிறுவுவதன் மூலம் அமெரிக்காவின் முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து கொள்வதோடு, யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அது பயன் பொருத்தமாக அமையும்-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. துரைராசா நேற்றுமாலை ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையமும் யாழ். பொதுசன நூலகமும் இணைந்து நடாத்திய அமெரிக்காவின் உயர் கல்வித் தோற்றத்தில் மாற்றம் என்ற புத்தகக் கண்காட்சியை குத்துவிளக்கேற்றி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

நாவலர் மண்டபத்தில் இடம் பெற்ற இப் புத்தகக் கண்காட்சி நிகழ்ச்சியில் அமெரிக்காவின் உயர் கல்வி தொடர்பான நூல்களும், படங்களும் கண்காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலைய பொறுப்பதிகாரி திரு. ரொஸ் பேசுகையில், இப்பகுதியில் கடந்த காலங்களில் நிலவிய சூழ்நிலை காரணமாகத் தாம் அடிக்கடி இப்பகுதிக்கு வரமுடியாது இருந்ததாகவும், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏ. துரைராசா ஒரு தகவல் நிலையம் யாழ்நகரில் அமைக்கப் படவேண்டும் என்று விடுத்த கோரிக்கை கரிசனையுடன் கவனத்திற் கொள்ளப்பட்டு, ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையம் யாழ்நகரில் ஆரம்பிப்பது பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும் என்றார்.

நேற்றைய இவ் வைபவத்தில் விசேட அழைப்பின் பேரில் புத்தி ஜிவிகளும், பத்திரிகையாளர்களும், முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் பி. பி. பாலசிங்கம் ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையப் பொறுப்பதிகாரி ரொஸ்சுக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றர்.

இன்று முதல் இரண்டு நாட்களுக்குப் பொது மக்களின் பார்வைக்காகக் கண்காட்சி காலை முதல் மாலை வரை திறந்து வைத்திருக்கப் படும்.

## வாகன வரி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணமும் சேர்த்துக் கட்ட வேண்டிய நிலைக்கு வாகன சொந்தக்காரர்கள் உள்ளாக வேண்டி வரும்.

## மாணவர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலவசப் பாடநூல் விநியோகம் சம்பந்தமாகவே மாணவர் தொகை பற்றிய விபரங்கள் திரட்டப்படுவதாக கூறப்படுகின்றது. (52)

## 'றோ' பற்றி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சின் மற்றொரு புலனாய்வு நிறுவனமான சி. பி. ஐ ஆந்திர மாநிலத்தில் செயல்பட வேண்டாம் என்று கூறியுள்ளதைச் சுட்டிக் காட்டி நீங்களும் அதேபோன்று வேண்டுகோளை றோ குறித்தும் விடுப்பீர்களா என்று நிருபர்கள் கேட்டனர்.

''மேற்கு வங்கம், திரிபுரா ஆந்திரம் போன்ற மாநிலங்கள் இது போன்ற கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிகிறது. பிரதமர் இது குறித்து வெளிப்படையாக விவாதம் வேண்டாம் என்று கூறியிருப்பதால் இது குறித்து அவரிடம் நான் நேரடியாகப் பேசுவேன்'' என்று முதலமைச்சர் மு. கருணாநிதி கூறினார்.

## திறைசேரி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிவைக்க உடன்பட்டுள்ளது. முன்புபோல ஒவ்வொரு முறையும் செயலக அதிகாரிகள் கொழும்பு போய் ஒய்வூதியக் கொடுப்பனவு நிதியை பெற்றுவரத் தேவையில்லை என்றார், (லோ)

## புலிகளைப் பற்றி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் வேண்டுமென்று சிறிபாலாடிசில்வா உரத்துச் சத்தமிட்டுக் கூறவும் மற்றும் பல எதிர்கட்சியினரும் அமைச்சர் பதிலளிக்க வேண்டுமென்று கூச்சலிட்டதுடன் உரிமைப் பிரச்சினையும் கிளப்பினர்.

அரசாங்க தரப்பிலிருந்தும் சிலர் ஏதோ சொல்லவும் சபையில் சிறிது நேரம் ஒரே கூச்சலும்குழப்பமுமாக இருந்தது.

சபாநாயகர் மிகச் சிரமப் பட்டு அமைதியை நிலைநாட்டுவதற்குப் பாடுபட்டார். சிறிது நேரத்தின்பின் அமைதியை நிலைநாட்டிய சபாநாயகர் சபையின் சிறப்புரிமைபற்றி ஆராய்ந்து தாம் ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து சபை அமைதியடைந்தது.

## மேற்குலக

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பால்மயற்றுடன் வந்திருந்த அமெரிக்கத் தூதுவராலய இரண்டாவது செயலாளரான லோறா. ஆர். லுப்டிக்கும் கலந்துகொண்டார். அதே வேளை பால் மயற் அண்மையில் இலங்கையில் இருந்து மாற்றலாகி நோர்வேக்குச் செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

இது பற்றி யாழ் மாவட்ட கமநல சேவை அதிகாரிகள் கொழும்பு கமநல சேவை ஆணையாளருக்குத் தெரிவித்தபோது போக்குவரத்துப் பிரச்சினை இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த உழவு இயந்திரங்களை யாழ் மாவட்டப் பிரதான கமநல சேவைகள் அலுவலகத்திற்கு கொண்டு வருவதற்கு விசேட வாகனங்கள் தேவை என ஆணையாளர் தெரிவித்ததாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார் (லோ).

# கடத்தல் பொருட்கள் பிடிபட்டன

(சென்னை)

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் களவாகக் கடத்திச் செல்லப்பட விருந்த 30,000 ரூபா பெறுமதியான கேத்திர கணித உபகரணப் பெட்டிகளை இந்திய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளார்கள்.

இலங்கையின் வட பகுதிக்கு இந்தியாவில் இருந்து களவாகக் கடத்திச் செல்லப்படும் பொருட்களில் கேத்திர கணித உபகரணப் பெட்டிகள் பிந்தியதாகும்.

## பொத்துவில்

# ஆஸ்பத்திரியில் வைத்தியர் இல்லாததால் மக்கள் அவதி

(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் (பிறி பெறல்) அரச வைத்திய சாலையில் நிரந்தர பல் டாக்டரின்மையால் பொது மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். வாரத்தில் ஒரு நாள் பற்சிச்சை செய்ய வரும் பதில் பல் டாக்டரும் ஒருமாதமாய் வருகைதராமையால் நோயாளிகள் ஏமாற்றமும் மனவேதனையும் அடைந்துள்ளனர்.

பொத்துவில் கிழக்கு மாகாணத் தின்தென்கோடியில் அம்பாறைமாவட்டத்தில் கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகும்.

இவ் வைத்திய சாலையினை நம்பி 40 மைல் தூரத்திலுள்ள கடமுனை, மற்றும் பாணமை, உல்லை, ஹூலதுக லகுகலை, கோமாரி தாண்டியடி பகுதி கிராமத்தைச் சேர்ந்த நோயாளிகள் தினமும் வருகை தருவதுண்டு.

இவ் வைத்திய சாலையில் பல் சிகிச்சை நிலையமும் அமைந்துள்ளது. நிரந்தர டாக்டர் ஒருவரும் இருந்தார். இந்த டாக்டர் இடமாற்றம் பெற்று சென்றமையையடுத்து ஒரு வருடமாய் எந்தவொரு டாக்டரும் நியமிக்கப் படவில்லை பதில் டாக்டர் ஒருவர் வாரத்தில் புதன் கிழமை மட்டும் அக்கரைப்பற்றிலிருந்து வருகை தந்து குறிப்பிட்ட தொகையினருக்கு மட்டும் சிகிச்சை செய்து செல்வார். ஒரு மாதமாய் அந்த டாக்டரும் வருகை தராமையினால் பல மைல்களுக்கப்பாலிருந்து பற்சிகிச்சை பெறவெனபலசிரமத்தின் மத்தியில் வாரத்தில் ஒருநாள் சமுகமளிக்கும் நோயாளிகளும் உள்ளூர் நோயாளிகளும் ஏமாற்றமடைந்து வீடு திரும்புவதை காணக் கூடியதாய் உள்ளது,

இந்நிலையை அம்பாறை மாவட்ட உயர் அதிகார பீடம் காணாதது போல் கவனிக்காமல் அலட்சியம் செய்கின்றனர். உடன் இக் கட்டநிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு நிரந்தர பல் டாக்டரை நியமனம் செய்ய வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.